
Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு


THINAMURASU





முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 24 திங்கட்கிழமை (09.01.2012) பக்கங்கள் 16 ஓசை – 100



கொலை வெறி 07



தீவிரமடையும் டெங்கு 08




விசேட பூஜை 11



கொசுக்கடி 12

# காணி, பொலிஸ் அதிகாரங்களை பகிர்வது குறித்து அரசு கவனம்



## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை பகிர்ந்தளிப்பது குறித்து கவனம் செலுத்தத் தயார் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் விதந்துரைக்கப்பட்டுள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களில் சிலவற்றை மாகாணங்களுக்கு வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தத்தயார் என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை முழுமையாக வழங்குவது நடைமுறைச்சாத்தியமற்றது எனவும், சில அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிர்ந்தளிப்பது குறித்து கவனம் செலுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் பல விடயங்களை கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது.

இலங்கை சிறிய நாடு என்ற காரணத்தினால் மாகாணங்களுக்கு பூரணஅதிகாரங்களை வழங்குவதில் சில சிக்கல்கள் காணப்படுகின்றன.

எதிர்வரும் 17 ஆம் திகதி அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் (15ஆம் பக்கம் பார்க்க)

## உயர்கல்வி அமைச்சர் இன்று யாழ்.வருகிறார்

(யாழ்ப்பாணம்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பை ஏற்று யாழ்.பல்கலைக்கழகத்தின் தேவைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க இன்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகின்றார்.

குடாநாட்டிற்கு வருகை தரும் அமைச்சர், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் செல்வி. வசந்தி அரசரட்ணம் மற்றும் துறைத் தலைவர்களுடன், பல்கலைக் கழகத்தின் உடனடித் தேவைகள், வளப்பற்றாக்குறையான விடயங்கள் குறித்து கலந்துரையாடவுள்ளார்.

## தண்ணிமுறிப்பு கிராமத்தில் நாளை மீள்குடியேற்றம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரைத்துரைப் பற்று பிரதேச செயலக பிரிவிலுள்ள தண்ணிமுறிப்பு கிராம மக்கள் நாளை செவ்வாய்க்கிழமை தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

தண்ணிமுறிப்பு கிராம அலுவலர் பிரிவில் வசித்து யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து தற்போது உறவினர், நண்பர்கள் வீடுகளில் வசித்து வரும் மக்களே மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

நாளை காலை 9.00 மணிக்கு முல்லைத்தீவு, குமுழமுனை மகா வித்தியாலயத்தில் வைத்து மீள்குடியமர்த்துவதற்கான பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

## சென்னையில் விபத்து; கிளிநொச்சிப் பெண் படுகாயம்

(சென்னை)

சென்னையில் நேற்றுக் முன்தினம் காலை இடம்பெற்ற வீதி விபத்தில் கிளிநொச்சியைச் சேர்ந்த பெண் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார். இது பற்றி மேலும் தெரியவருவதாவது, கிளிநொச்சியைச் சேர்ந்த 35 வயதுடைய முந்தன் நந்தினி என்ற பெண் சென்னை கிழக்குக் கடற்கரைச்சாலையில் உள்ள கல்லூரி ஒன்றிற்கு தனது பிள்ளைகளை விட்டுவிட்டு வீதியைக் கடக்க முற்பட்டபோது மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்துக்குள்ளானார்.

சம்பவத்தில் படுகாயம் அடைந்த அவர் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் அவரது கால் முறிவடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## அரசியல் தீர்வை வழங்குவதன் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்க்கலாம்

### பசிலின் விருப்பம் இது என விக்கிலீக்ஸ் தகவல்




(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வு காண வேண்டுமென்ற நிலைப்பாட்டை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கொண்டிருந்தாரென விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

2007ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராகப் பணியாற்றிய றொபேர்ட் ஓ பிளேக்கினால் இந்த இரகசிய தகவல் குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக விக்கி லீக்ஸ் தெரிவித்துள்ளது. இத்தகவல் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரர்களான கோத்தாபய ராஜபக்ஷவுக்கும், பசில் ராஜபக்ஷவுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் காணப்பட்டன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவும், படைத்துறைச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் (15ஆம் பக்கம் பார்க்க)

## ஓட்டோ சாரதிகள் ஒத்துழைத்தால் குற்றச்செயல்களை குறைக்கலாம்

### யாழ்.பொலிஸ் அத்தியட்சகர்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலேயே அதிகமானவர்கள் போக்குவரத்து விதிகளை மீறிச் செயற்படுகின்றனர் என பொலிஸ் அத்தியட்சகர் சமன் சிகேரா தெரிவித்தார்.

நேற்றுக்காலை யாழ்.ரிம்மர் மண்டபத்தில் இடம்பெற்ற யாழ். மாவட்ட ஓட்டோ சாரதிகள் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையர் மூவர் ஜேர்மனியில் கைது

(கொழும்பு)

இலங்கை அகதிகள் என சந்தேகிக்கப்படும் மூன்று ஆண்கள் ஜேர்மன் டேர்பின் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போலி கடவுச் சீட்டை காட்டி (15ஆம் பக்கம் பார்க்க)

## தூதுவர் அழைப்பு

(கொழும்பு)

சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூதுவர் வடிவேல் கிருஷ்ணமூர்த்தியை அரசாங்கம் திருப்பி அழைத்துள்ளதாக அரசாங்க உயர் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இவருக்குப் பதிலாக சென்னையில் உள்ள துணைத் தூதுவராக நியமிக்கப்படவுள்ளவரின் பெயர் இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

திடீரென சென்னையில் உள்ள துணைத் தூதுவரை அரசு திருப்பி அழைத்துள்ளதற்கான காரணம் எதுவும் தெளிவாகத் தெரியவில்லை.

## முடங்கியுள்ள வீட்டுத் திட்டப் பணிகள் புத்துயிரளிக்க வருகிறார் கிருஷ்ணா

போரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த நிலையில் அரசினால் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கான இந்திய அரசு அமைத்துக் கொடுக்க வாக்குறுதி அளித்திருந்த வீட்டுத்திட்டப் பணிகள் முடங்கியிருக்கும் நிலையில் அந்தப் பணிகளை விரைவாக முன்னெடுக்கும் வகையில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவின் விஜயம் அமையும் என 'ஹிந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. இதுவரை காலமும் பின்னடைவைக் கண்டிருந்த இந்த வீட்டுத் திட்டத்திற்கு புதிய பரிமாணத்தை வழங்கும் வகையில் கிருஷ்ணாவின் விஜயம் அமையவுள்ளது.

வடக்கிற்கு விஜயம் செய்யும் அவர் யாழில் முதற்கட்டமாக நிர்மாணிக்கப்பட்ட 45 வீடுகளை பயனாளிகளுக்கு கையளிப்பதுடன் கிளிநொச்சியில் பத்தாயிரம் பேருக்கு துவிச்சக்கர வண்டிகளையும் வழங்கவுள்ளார்.

அத்துடன் இந்தியாவின் உதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ள ரயில் பாதைத் திட்டத்தையும்



காலியில் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இதேவேளை, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முயற்சிகள் குறித்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவார். (15ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க அதிகாரிகள் அடுத்த வாரம் வருகை

(கொழும்பு)

அமெரிக்காவின் உயர்மட்ட அதிகாரிகள் இருவர் அடுத்த வாரம் இலங்கைக்கு பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கையை கையாளும் (15ஆம் பக்கம் பார்க்க)

# முப்பது வருடங்களின் பின்னர் வடமாகாண 'முழு நிலா முத்து'



(யாழ்ப்பாணம்)

'முழு நிலா முத்து' என்னும் தொனிப்பொருளில் வடமாகாணத்தின் பௌர்ணமி விழா நேற்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் காலை 10.00 மணிக்கு வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

தமிழ் இனிய இசையுடன் விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டதுடன், தாவடி புகழ் இசைக் குழுவினரின் இசைக்கச்சேரி என்பனவும் இடம்பெற்றது.

தொடர்ந்து வவுனியா தமிழ் மகா வித்தியாலய மாணவிகளின் வரவேற்பு நடனமும், வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதா கிருஷ்ணனின் வரவேற்புரையும் இடம்பெற்றது.

வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனின் தலைமையுரை, வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவனின் பிரதம விருந்தினர் உரை என்பன இடம்பெற்றது. தொடர்ந்து வடமாகாணத்தின் 12 வலயங்களிலிருந்து வருகைதந்த மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

'முழு நிலா முத்து' என்னும் நூலை வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆளுநரின் செயலாளரிடம் முதற் பிரதியை வழங்கிவைத்தார்.

30 வருடங்களின் பின்னர் பௌர்ணமி விழா வடமாகாணத்தில் கொண்டாடப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ் விழுமியங்களும் கலாசாரமும் எடுத்துக்காட்டப்படுகிறது.

இவ்வாறான கலை கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் முகமாகவே பௌர்ணமி விழா பாடசாலைகளில் கொண்டாடப்படுகிறது.

இந்நிகழ்வில் வடமாகாண கல்வித்துறை சார் அதிகாரிகள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (எஸ்)

# பின்தங்கிய மக்களின் வாழ்வியல் அபிவிருத்தி

(யாழ்ப்பாணம்)

கிராமப்புறங்களில் பின்தங்கிய நிலையிலுள்ள மக்களின் வாழ்வியலை அபிவிருத்தி செய்வதற்கான பணிகளை கிராமிய உழைப்பாளர் அபிவிருத்தி மையம் மேற்கொள்ளவுள்ளது.

இது தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில்,

கிராமப்புற உழைக்கும் மக்களின் வாழ்வியல் அன்று தொட்டு இன்றுவரை மிகவும் பின்தங்கிய நிலையிலே காணப்படுகிறது. கல்லும் முள்ளும் நிறைந்த பாதைகள், குடியிருப்புக்கு மத்தியில் சுடுகாடு, மின்சார வசதியின்மை, மலசலகூடப் பிரச்சினை, நிலப்பிரச்சினை, கல்வியறிவு இன்மை, கலாசார சீரழிவுகள் என கவனிப்பாரற்ற நிலையில் பின்தங்கியதாகவே காணப்படுகிறது.

இவ்வாறு பின்தங்கிய நிலையிலுள்ள மக்களது உரிமைகளை உறுதிப்படுத்தி அவர்களது கிராமங்களை அபிவிருத்தி செய்து அவர்களது பிள்ளைகளின் கல்வியறிவை மேம்படச் செய்து அவர்களது வாழ்வியல் சூழலை அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற நோக்கில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கமைய இந்தப் பணிகளின் ஒன்றாக உழைக்கும் மக்கள் மத்தியில் ஓர் ஆழமான ஆய்வுப் பணியை மேற்கொண்டு அதன்மூலம் அவர்களுடைய பிரச்சினைகளை வெளியுலகிற்கு கொண்டுவரப்பட்டு அதற்கு தீர்வுகளை பெற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறைச்சாலை நிர்மாணம் 20 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணத்தில் புதிய சிறைச்சாலைக்கான கட்டட நிர்மாணப் பணிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் ஆர்.எம்.செனரத் பண்டார தெரிவித்துள்ளார்.

சுமார் 2,000 கைதிகளைத் தடுத்து வைக்கக்கூடிய வகையில் நவீன வசதிகளை கொண்டதாக இந்த புதிய சிறைச்சாலை அமைக்கப்படவுள்ளதாகவும் இதற்கான அடிக்கல் திரைநீக்கம் ஏற்கெனவே செய்துவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

2013 ஆம் ஆண்டில் இச்சிறைச்சாலைக்கான கட்டட நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படுமெனவும் யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் ஆர்.எம்.செனரத் பண்டார குறிப்பிட்டுள்ளார்.

# அமைதியற்ற சூழலில் நூலகம்; வாசகர்கள் விசனம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட சங்கானைப் பொது நூலகம் அமைதியற்ற இடத்தில் தற்போது இயங்கி வருவதால் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக வாசகர்கள் தெரிவித்துள்ளனர்.

சங்கானைக் கிராம சேவகர் பிரிவுடன் இணைந்து செற்பட்டு வந்த இந்தப் பொது நூலகம் மீள் நிர்மாணப் பணிகளுக்காக சங்கானை யூனியனுக்கு அண்மையில் இடமாற்றப்பட்டுள்ளது.

தற்போது வீடொன்றிலேயே இயங்கிவரும் இந்த நூலகத்திற்கு மிக அண்மையில் மீன் சந்தை, உணவு விடுதி மற்றும் பலசரக்கு கடைகள் என்பன காணப்படுவதால் எந்நேரமும் இந்தப் பகுதியில் அமைதியற்ற சூழ்நிலையே காணப்படுகின்றது.

இதனால் இந்த நூலகத்திற்குச் செல்லும் மாணவர்கள் மற்றும் வாசகர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதுடன், நூலுகத்திற்குச் செல்பவர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்தே காணப்படுகின்றது.

இந்த நூலகம் 1965 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

*சி.சுஜாதா (சிகரம் ஊடக இல்ல மாணவி)*

# முல்லை. செல்வாபுரத்தில் 25 குண்டுகள் மீட்பு!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு செல்வாபுரம் பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மோட்டார் குண்டுகளை ஒன்றை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர். முல்லைத்தீவு அதிரடிப், படை முகாமின் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து, இந்தக் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

82 மில்லி மீற்றர் ரகத்தை சேர்ந்த 25 குண்டுகள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட இந்த குண்டுகள் மேலதிக விசாரணைகளுக்காக முல்லைத்தீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# மக்களின் பிரச்சினைகள் குறித்து கொக்குவிலில் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு கல்திட்டி ஞான வைரவர் சனசமூக நிலையத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கலந்துரையாடல் நேற்றுக் காலை 10.30 மணியளவில் தலைவர் இ.விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச அமைப்பாளரும் பிரதேசசபை எதிர்க் கட்சித் தலைவருமான அ.இரவீந்திரதாசன் கலந்துகொண்டு மக்களின் அன்றாட பிரச்சினைகள தொடர்பாக கலந்துரையாடினர்.

இதன்போது நல்லூரில் பொது மக்களின் அன்றாட பிரச்சினை தொடர்பாகவும் ஏனைய விடயம் தொடர்பாகவும் அமைச்சர் சந்திக்க இருக்கின்றார் எனவும் சனசமூகநிலைய பிரதிநிதிகளை சந்திக்க ஏற்பாடு செய்து தருவதாகவும் கூறினார்.

வீதிகளுக்கு 10 மின்விளக்குகளை பொருத்த வேண்டும் என பொதுமக்கள் கோரினார்கள்.

உடனடியாக ஒன்பது விளக்குகளை பிரதேசசபை எதிர்க் கட்சித் தலைவர் சனசமூக நிலைய செயலாளர் சதாசிவத்திடம் கையளித்தார்.

இதேவேளை, பின்வரும் கோரிக்கைகள் கொண்ட மகஜர் எதிர்க்கட்சித் தலைவரிடம் கையளிக்கப்பட்டது.

இந்திய வீட்டுத்திட்டம், மலசலகூடம், இலவச துவிச்சக்கர வண்டி, பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், தையல்பயிற்சி நிலையம் அமைத்தல், சனசமூக நிலையத்துக்கு புதிய கட்டடம் அமைப்பதற்கு நிதிகோரல், காணி இல்லாதவர்களுக்கு காணி வழங்குதல், கோயில் காணிகளில் வசிப்போருக்கு காணி உறுதி பெற்றுக் கொடுத்தல், முன்பள்ளி பாலர் பாடசாலைக்கு கதிரைகள் வழங்குதல் உட்பட்ட கோரிக்கைகள் அடங்கிய மகஜர் கையளிக்கப்பட்டது.

# வீதிகள் செப்பனிடல்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் பெய்த மழையினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டிருந்த பிரதான வீதிகள், உள்ளக வீதிகள் தற்போது வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் செப்பனிடப்பட்டு வருகின்றன.

பலாலி வீதி, கே.கே.எஸ். வீதி உள்ளிட்ட முக்கிய வீதிகள் மற்றும் பிரதான வீதிகளை இணைக்கும் உள்ளக வீதிகளே இவ்வாறு புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இப்புனரமைப்புப் பணிகள் இரவு பகலாக மிகவேமாக இடம்பெற்று வருகின்றது. (எப்.எஸ்)


## சிறு விளம்பரங்கள்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1186)

**ஓடருக்கு செய்துகொடுக்கப்படும்**

எம்மிடம் ஓடருக்கு றோல்ஸ், பற்றீஸ், வடை சிற்றுண்டிகளைப் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகளுக்கு - ப.விஜயகுமார், தொ.இல: 0724273704 (R/077)




'தேடும் சிட்டுக்கள்' சிறுவர் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ம.போல்நட்சத்திரம் அடிகள் உரையாற்றுவதையும் சிறார்களின் கலை நிகழ்வினையும் காணலாம்.




ஸ்ரீ ராம ஜெயம்

**சகல பரிகாரங்களுக்கும் மலையாள மாந்திரிகம்.**

கேட்ட வரத்தை எனக்கு கொடுத்தது கிருஸ்ணபரமாத்மாவே!

அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்தது இல்லை. ஜாதக கணிப்பை ஆணி வேர் அக்கு வேராக கணித்து தெரிந்த பின்பே மலையாள மாந்திரிக சக்தி அவர் அவருக்கு ஏற்ற உச்சாடம் செய்யப்படுகின்றது. கல்விஞான சித்தம் கிட்ட மட்டும் 9 மாதத்துக்கு முன்பே பரிகாரம் செய்து கொள்ள வேண்டும். அதி விஷேடமாக வெளிநாட்டவருக்கு என அவர்கள் எண்ணங்கள் நிறைவேறும் வண்ணம் வியாழக்கிழமை தோறும் இங்கு மாந்திரிக உச்சாடங்கள் செய்யப்படுகின்றன. உள்நாட்டவருக்கென இம்மாதக்கடைசியில் வரும் திகதியில் காலை 09 மணி முதல் மாலை 05 மணிவரை அக்கினி குண்டல யாக பூஜைகள் நடைபெறும். இங்கு தீய வேலைக்கு இடமில்லை. இரகசியம் பேணப்படும். எம்மதத்தினருக்கும் சேவை உண்டு. சகல குறை நிறைகளுக்கும் முன் அறிவித்தலுடன் நேரத்தை ஒதுக்கி வந்தால் மட்டுமே என்னை சந்திக்கலாம்!

தேசபந்து, பேராசிரியர், துர்க்கைதாசன் கலாநிதி P.K. சாமி J.P ஐயா!

**அருள்ஞான சித்த இல்லம். ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்.**

23, மேபீல்ட் ரோட் கொழும்பு - 13. தொ.பே: 011 2342463, 011 2342464, 011 2470615

நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி இல்லம்

இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508

நுவரெலியாவிலும் ராகு கால பூஜை தினந்தோறும் நடைபெறும்.

(C/1185)

அதிகம் பேசாதவனை உலகம் அதிகம் விரும்புகிறது. அளந்து பேசுபவனை அதிகம் மதிக்கிறது. அதிகம் செயல்படுபவனையே கைகூப்பித் தொழுகிறது.

*- கன்பூசியஸ்*

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## வியாபார தலைமையும் அரசியல் தலைமையும்!

நமது அரசியல் சூழலில் வியாபாரிகள் அரசியல்வாதிகளாக மாறுவதும், அரசியல்வாதிகள் வியாபாரிகளாய் இருப்பதும் சகஜமாக இருக்கிறது. தமிழ்மக்களை உய்யவிடாத துரதிர்ஷ்டமாய்ப் பிடித்தாட்டி வருபவற்றில் இந்தச் சீத்துவக்கேட்டுக்கும் ஒரு பங்கிருக்கிறது. ஆகப் பெருந்துயரம் என்னவென்றால் நமக்கு வாய்த்த அரசியல் திலகங்களுக்கு, வியாபாரிகளிடம் இருக்கக்கூடிய நேர்மை நியாயம் கூடக் கிஞ்சித்தும் இல்லாதிருப்பதுதான்.

மக்களின் காசைச் சுருட்டிக் கொண்டோடியவர்களும், கட்சிச் சொத்தைச் சுருட்டியவர்களும், சாராய வியாபாரிகளும், அகதிமக்கள் இருந்த காணிகளைப் பிடுங்கிய அப்புக்காத்துமாரும்தான் இப்போது மக்களின் வாக்குகளையும் சுருட்டிக் கொண்டிருக்கிறார்கள். வியாபாரத்திற்கு அரசியலைப் பயன்படுத்திக் கொண்டது போய், இன்று, எமது மக்களின் கஷ்டங்களையே கூவி விற்று அரசியல் லாபம் தேடும் வியாபாரிகளாய் மாறிவிட்டவர்களை என்ன செய்ய?

அரசியல் தலைமைத்துவத்துக்கு குறிப்பிட்ட முன்மாதிரியும், சிறப்பான சிந்தனை முறையும் அவசியம். வியாபாரிகளைப் பொறுத்தவரை லாபத்தை அதிகரிப்பதொன்றே இலக்கு. அரசியல் தலைவர்களாக இருந்தால், சமூக நலனை அதிகரிக்க வேண்டும் என்பதே அவர்கள் சிந்தையிலிருக்கும். வியாபாரத் தலைவர்கள் மக்களையும் சந்தைப்படுத்தும் யோசனையில்தான் இருப்பார்கள். அரசியலில் சிறந்த தலைவர்கள் கடின உழைப்பாளிகளாகவும் உண்மையானவர்களாகவும் இருக்கவேண்டும். வியாபாரத்திற்குப் பெரும்பாலும் வாய்சாலகம் போதும்.

வியாபாரத்தில் நியாயமற்று இருப்பது கடைசியில் அவ்ர்களையும் மிஞ்சிப்போனால் அவர்கள் பங்காளிகளையும் சீரழிக்கும். அரசியலில் நியாயமின்றி செயல்பட்டால் முழு தேசத்தின் எதிர்காலமும் நிர்மூலமாகும். வியாபார தலைமைத்துவத்தில் பலமுள்ளவனே வாழ்வான் என்ற நியதி செல்லுபடியாகும். அரசியல் தலைமைத்துவமோ பலவீனனின் வாழ்வோடு தன்னை பிணைத்துக் கொள்வது.

அரசியல் தலைமைத்துவத்துக்கான ஏழு வெற்றிகரமான நற்பண்புகளைக் குறிப்பிடுகிறார்கள். நம்பகத்தன்மை, கருணை, கடந்து பார்க்கும் சக்தி, தோழமைப் பண்பு, கடப்பாடு, கவர்ச்சி மற்றும் போட்டித்திறன் ஆகிய பண்புகள்தான் அவை. அதேபோல தவிர்க்க வேண்டியவையாக ஏழு மோசமான தீமைகளைக் குறிப்பிடுகிறார்கள். பேராசை, பெரு நுகர்வு, சோம்பேறித்தனம், பொறாமை, கர்வம், கோபம் ஆகியவைதான் அவை.

அரசியலை விரைவாக பணம் சம்பாதிக்கும் வழியாகப் பார்க்கும் அரசியல்வாதியிடம் பேராசை என்ற தீய பண்பு உருவாகிறது. இதற்கு நேரெதிரான நல்ல பண்பு நம்பகத்தன்மை. பேராசை மற்றும் நேர்மையின்மைக்குப் பதிலாக அரசியல் தலைமை நம்பகத்தன்மையுடன் திகழவேண்டும்.

இலட்சக்கணக்கான மக்கள் பசியிலும், நல்ல வசதிகள் கிடைக்காமலும் இறந்துபோகின்ற வேளையில், தாங்கள் விழுங்க நினைக்கும் பண்பு பெருநுகர்வாகும். நல்ல உணவு மற்றும் வசதிகளுள்ள அரசியல் தலைவர் அதே தரத்தில் தமது மக்களுக்கும் கிடைக்கவேண்டும் என்று குறைந்தபட்சம் எண்ணிப் பார்க்கவேண்டும். இதற்கு நேரெதிரான நற்பண்பு கருணை ஆகும். பசியுடன் இருக்கும் வசதிக் குறைபாடுகள் கொண்ட மக்கள் மீது கருணை வந்தால் அது ஒரு நல்ல அரசியல் தலைவரை உருவாக்கும்.

மக்களுக்கு நல்லது செய்யும் எண்ணமின்மை, சோம்பேறித்தனம் என்னும் தீமைக்கு தவறான தலைவர்களைக் கொண்டு செல்கிறது. இதற்குப் பதிலாக அவர்கள் எதிர்காலம் குறித்து கடந்துபார்க்கும் சக்தியுடன் இருக்க வேண்டும். நாட்டை முன்னுக்குக் கொண்டு செல்ல அவர்கள் செயற்பட்டுக்கொண்டே இருக்கவேண்டும். இதுதான் பெரிய தலைவர்களை உருவாக்குகிறது.

இப்படித்தான் அரசியல் தலைமைத்துவம் இருக்கவேண்டும். இந்தப் பண்புகள் மூலம் ஒருவர் நாட்டை நல்ல எதிர்காலத்துக்கு இட்டுச் செல்லமுடியும். அதைத்தான் காந்தி, மாவோ, பிடல் காஸ்ட்ரோ, லெனின், நெல்சன் மண்டேலா மற்றும் சேகுவேரா ஆகியோர் செய்தனர். அவர்களது வாழ்க்கையே ஏழு தீய பண்புகளைத் தவிர்த்து ஏழு நற்பண்புகளை கைக்கொண்டதுதான். அத்தகைய தலைவர்களால்தான் மக்கள் காப்பாற்றப்படுவார்கள். வியூபாரத் தலைவர்கள் மக்கள் தொடர்ந்தும் வீழ்ந்து கிடக்கவே செயற்படுவார்கள்.

*– ஆசிரியர்*

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது ஆனந்தசங்கரி கடும் அதிருப்தி

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது கட்சியை ஒதுக்கியே செயற்படுவதாக தமிழர் விடுதலைக் கூட்டணி குற்றஞ் சுமத்தியுள்ளது.

கடந்த உள்ளூராட்சித் தேர்தல்களின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கின் பல இடங்களில் வெற்றிபெற்றது. அதிலும் வன்னியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்புமனு நிராகரிக்கப்பட்ட நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கீழ் போட்டியிட்டு கூட்டமைப்பு தமது தோல்வி நிலையை தவிர்த்துக்கொண்டது.

இந்த நிலையில் தேர்தல் முடிவடைந்து 6 மாதங்களாகியும் தமது கட்சியுடன் தமிழத் தேசியக் கூட்டமைப்பு எவ்வித தொடர்புகளையும் கொள்ளவில்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி குற்றஞ் சுமத்தியுள்ளார்.

தமது கட்சியை பொதுப் பிரச்சினைகள் தொடர்பில் இணைந்து செயற்படுவதில் கூட்டமைப்பு விருப்பம் கொண்டிருக்கவில்லை என்றும் ஆனந்தசங்கரி குறிப்பிட்டுள்ளார்.

## சர்வதேச குற்றவாளிகள் இலங்கைக்குள் ஊடுருவுவதை தடுப்பதற்கு புதிய திட்டம்

(கொழும்பு)

இலங்கைக்குள் சர்வதேச குற்றவாளிகள் நுழைவதைத் தடுக்கும் முகமாக குடிவரவு குடியகல்வித் திணைக்களம் புதிய திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவிருக்கிறது.

குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் எதிர்வரும் மாதத்தில் இருந்து இன்டர்போல் என்ற மேற்படி புதிய சர்வதேசத் திட்டத்தை அறிமுகப்படுத்தப் போவதாக அறிவித்துள்ளது. இணையத்தின் ஊடாக இலங்கைக்கு வருவோர் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் முறையில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இதனையடுத்தே இன்டர்போல் குற்றவாளிகளைக் கண்டறியும் திட்டத்தை அறிமுகப்படுத்தப் போவதாக குடிவரவு கட்டுப்பாட்டாளர் சூலாநந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

இதன்போது சர்வதேச ரீதியில் குற்றவாளியாக, கறுப்புப் பட்டியலின் மூலம் கருதப்படுவோரை கண்டறிவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த இன்டர்போல் திட்டத்துக்கு அவுஸ்ரேலிய அரசாங்கம் நிதியுதவியை வழங்கவுள்ளதாகவும் குடிவரவு கட்டுப்பாட்டாளர் சூலாநந்த குறிப்பிட்டுள்ளார்.

## யாழில் 89 விதவைகள் 20 வயதுக்குட்பட்டவர்கள்

யாழ். மாவட்டத்தில் 89 இளம் விதவைகள் இருப்பதாகவும் இவர்கள் வாழ்வாதார ரீதியில் பெரும் இன்னல்களை எதிர்கொண்டு வருவதாகவும் யாழ். மாவட்டச் செயலக அறிக்கையில் இருந்து தெரியவருகின்றது.

கடந்த 2011 ஆம் ஆண்டில் 29 ஆயிரத்து 742 விதவைகள் யாழ். மாவட்டத்தில் இருப்பதாக இறுதியாக வெளியான அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.

இருந்த போதிலும் 89 விதவைகள் 20 வயதிற்குட் பட்டவர்களாக இருப்பதாகவும், கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களினால் கணவர்மார் இறந்து போனவர்களாகவும் இவர்கள் வாழ வழி தெரியாது நிர்க்கதியான நிலையில் இந்த இளம் பெண்கள் தவிப்பதாகவும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன. (எஸ்)

## பாரத லக்ஷ்மன் கொலை வழக்கு; விசாரணைகள் நிறைவடையும் நிலையில்

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லகஷ்மன் பிரேமசந்திரவின் படுகொலை தொடர்பான விசாரணைகள் 95 வீதம் பூர்த்தியாகியுள்ளதென பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இந்தக் கொலை தொடர்பில் இதுவரை 16 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தி யட்சகர் அஜித் ரோஹன கூறியுள்ளார். இதில் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் தரப்பைச் சேர்ந்த 15 பேரும் பாரத லக்ஷ்மனின் தரப்பைச் சேர்ந்த ஒருவரும் அடங்குவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் 10 சந்தேகநபர்களை அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்டதாகவும் இதன்போது அவர்கள் அனைவரும் அடையாளம் காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். விசாரணையுடன் தொடர்புடைய ஆவணங்களை அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக சட்ட மாஅதிபரிடம் கையளிப்பதற்கான ஏற்பாடுகளை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாராத லகஷ்மன் பிரேமசந்திரவின் படுகொலையுடன் தொடர்புடைய துப்பாக்கிகள் அரச இரசாயன பகுப்பாய்வாளரினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி பிற்பகல் முல்லேரியாவில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லகஷ்மன் பிரேமசந்திர உள்ளிட்ட 3 பேர் உயிரிழந்தனர்.

## வேலைக்குச் செல்லும் சிறுவரை மீட்டெடுப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

கல்முனைப் பிரதேசத்தில் பாடசாலைக்குச் செல்லும் 14 -17 வயதிற்கு இடைப்பட்ட 23 சிறுவர்கள் தனியார் கடைகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

பாண்டிருப்பு அகரம் சமூக சேவை அமையத்தின் கல்வி நடவடிக்கைப் பிரிவினர் பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலையில் இணைப்பதற்கான நடவடிககைகளை மேற்கொள்ளும் பொருட்டு ஆய்வொன்றினை மேற்கொண்டனர்.

இவ் ஆய்வின் போதே இந்த விடயம் தெரியவந்துள்ளதாக பாண்டிருப்பு அகரம் சமூக சேவை அமையத்தின் தலைவர் எஸ்.துஸ்யந்தன் தெரிவித்தார்.

இவ் அமைபபினர் மேற்கொண்ட ஆய்வின்படி கல்முனைப் பிரதேசத்திலுள்ள நகைக்கடை, தேநர்க்கடை, பலசரக்குக் கடை, பொதுச்சந்தை என்பவற்றிலேயே சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இவர்களை மீண்டும் பாடசாலையில் இணைத்து அவர்களது கல்வி நடவடிக்கைகளை தொடர்வதற்குரிய அனைத்து வேலைத் திட்டங்களையும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் உதவியுடன் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வவுனியா கைத்தொழில் பேட்டையின் நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வு

(வவுனியா)

வவுனியா-பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள கைத்தொழிற் பேட்டையின் நடவடிக்கைகள் தொடர்பில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுமுன் தினம் நேரில் சென்று ஆராய்ந்தறிந்து கொண்டார்.

வவுனியா-பூந்தோட்டம் பகுதியிலுள்ள கைத்தொழிற்பேட்டை நீண்ட காலமாக இயங்காத சூழலில் அதனை மீளவும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழ் இயங்க வைப்பது தொடர்பில் அமைச்சர் ஆராய்ந்துள்ளார்.



கைத்தொழிற் பேட்டையின் பல்வேறு பகுதிகள் தற்போது தனியார் பாவனையிலுள்ள நிலையில் அதன் சாதக பாதக நிலை தொடர்பாகவும் வளாகத்தின் சுத்தம் சுகாதாரம் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது. இதில் ஈ.பி.டி.பி.யின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் ரகு உட்பட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

## மோ.சைக்கிள்கள் வழங்கல்

(சாவகச்சேரி)

யாழ்.மாவட்டத்தில் பிரித்தானிய நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சத்துணவுத் திட்டத்தில் பணிபுரியும் 100 குடும்ப நல சேவையாளர்களுக்கு மோட்டார் சைக்கிள்களும் 200 தொண்டர்களுக்கு சைக்கிள்களும் வழங்கப்படவுள்ளது. குடும்ப நல சேவையாளர்களுக்கு சுமார் ஒரு இலட்சத்து 20ஆயிரம் பெறுமதியான பெண்களுக்கான மோட்டார்சைக்கிள் (scooty bup) ரி.வி.எஸ் மோட்டார்சைக்கிள்கள் என்பன வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கு வழங்கவென ஒரு தொகுதி மோட்டார்சைக்கிள்களும் துவிச்சக்கர வண்டிகளும் சாவக்சேரி சுகாதாரத் திணைக்களத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளது. இச்சத்துணவுத்திட்டம் யாழ்.மாவட்டத்தில் ஊர்காவற்துறை, மருதங்கேணி, தெல்லிப்பளை, சாவகச்சேரி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (11)

## மரக்கன்றுகள் விநியோகம்

(சாவகச்சேரி)

நாட்டில் 10 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேச செயலக காணிப்பிரிவினரால் தென்மராட்சி பகுதி பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

கிராம அலுவலர்கள் வழங்கிய விபரங்களில் உள்ள பயனாளிகளுக்கு மா, எலுமிச்சை, மாதுளை போன்ற மரக்கன்றுகள் அந்தந்த கிராம அலுவலகங்களில் வைத்து விநியோகிக்கப்படுகிறது. ஒரு மாங்கன்று 50 ரூபா வீதமும், மாதுளை 30 ரூபா வீதமும், எலுமிச்சை 20 ரூபா வீதமும் விநியோகிக்கப்படுகிறது.

காணித்திணைக்களத்தால் வழங்கப்படும் இம்மரக்கன்றுகளை பெற்றுக்கொள்ள விரும்புவோர் தமது பிரிவு கிராம அலுவலர் அல்லது பிரதேச செயலகக் காணிப்பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

## மாடியிலிருந்து வீழ்ந்த இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இரண்டு மாடிக் கட்டடத்தில் இருந்து விழுந்ததில் இளைஞர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

திருநெல்வேலி-பரமேஸ்வராச் சந்திக்கு அருகாமையில் நேற்றுமுன்தினம் காலை பத்து மணிக்கு இடம்பெற்ற இச் சம்பவத்தில் கந்தரோடை கிக்கிராணைப் பகுதியைச் சேர்ந்த லோகேந்திரன் யோகதாஸ் (வயது-25) என்ற இளைஞரே படுகாயமடைந்துள்ளார்.

முகத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (எஸ்)

## மூடப்பட்டு வரும் வீதிக் குழிகள்

(குருநகர்)

வீதிகளின் ஓரங்களிலும், வீதியின் நடுவிலும் தோன்றி போக்கு வரவுகளில் உயிர் அச்சுறுத்தல்களை விடுத்துக் கொணடிருந்த குழிகள் மூடப்பட்டு வருகின்றன.

குறிப்பாக முதலாம் குறுக்கு வீதி, ஆஸ்பத்திரி வீதிச் சந்திப் பகுதியில் இருந்து வந்த குழிகள் தார்க் கலவை இட்டு மூடப்பட்டுள்ளன.

அதேவேளை, இத்தகைய குழிகள் ஆஸ்பத்திரி வீதியில் யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக பல தோன்றி அபாய அறிவித்தல்களையும் விடுத்து வருகிறன.

இத்தகைய நிலைப்பாடு யாழ். நகரின் பல வீதிகளில் தோன்றியுள்ளது போலவே புறநகர் வீதிகள் பலவற்றிலும் காணப்படுவதும் சுட்டிக்காட்டப்படுகிறது. (68)

## குளப்பிட்டி மீன்சந்தையில் கழிவுநீர் தேக்கம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில்-குளப்பிட்டிச் சந்தைக் கட்டடத் தொகுதியினைச் சுற்றி கழிவுநீர் தேங்கி நிற்பதால் பெரும் சிரமத்தின் மத்தியுல் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதாக மீன்சந்தை வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அதிகளவான வியாபாரிகளையும், நுகர்வோரையும் ஈர்க்கும் இடமாகக் காணப்படும் இந்தச் சந்தையின் கட்டடத் தொகுதியானது மரக்கறி மற்றும் மீன் வியாபார நடவடிககைகளுக்காக இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

சந்தையின் மரக்கறி வியாபாரக் கட்டடத் தொகுதியினைத் தினமும் மாலை நேரங்களில்



நல்லூர் பிரதேச சபையினர் சுத்தம் செய்வதனால், தாம் எந்த வித சிரமங்களுமின்றி சுத்தமான சூழலில் வியாபாரம் செய்வதாக மரக்கறி வியாபாரிகள் கூறினர்.

இதேவேளை, இந்தச் சந்தையில் தாம் பெரும் கஷ்டத்தின் மத்தியில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக மீன் வியாபாரிகள் தெரிவித்தனர்.

(சுகிதா, சிரகம் ஊடக இல்ல மாணவி)

## ஏ-9 வீதியைக் கடப்பதில் சிரமம்; விபத்துக்கள் ஏற்படும் அபாயநிலை

(கிளிநொச்சி)

ஏ-9 பாதையில் வீதித் தடைகள் வைக்கப்படாததால் வீதியைக் கடக்கும் பொது மக்கள் மற்றும் மாணவர்கள் நாளாந்தம் அபாயத்துடன் வீதியைக் கடக்க வேண்டிய நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது ஏ-9 பாதை புனரமைப்புப்பணிகள் நடைபெற்று வரும் நிலையில், புனரமைக்கப்பட்ட பகுதிகளில் வீதித் தடைகள் (மஞ்சள்கோடு) இடப்படவில்லை. அகலம் கொண்ட இவ்வீதியில் 80 கிலோமீற்றர் தூரத்தை கடந்து செல்ல வேண்டும்.

வாகனங்களும் வேகக்கட்டுபாட்டைக் குறைத்து தமது பயணங்களை மேற்கொள்ள முடியாத நிலையில் வேகமாகவே வாகனங்களும் பயணிப்பதால், வீதியைக் கடக்கும் பொதுமக்கள் முதலில் ஒரு பகுதியைக் கடந்தும் பின்னர் சிறிது நேரம் நின்றே மீதிப் பகுதியைக் கடந்து செல்ல வேண்டியிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ்வீதியில் தற்காலிகமாகவாவது வீதித் தடைகள் வைக்கப்பட்டால் மாணவர்களும் பொதுமக்களும் வீதியைச் சிரமமின்றிக் கடக்க முடியும். அத்துடன் வாகனங்களும் சிரமமின்றி தமது பயணத்தை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

ஏ-9 பாதையில் குறிப்பிட்ட இடங்களில் வீதித் தடைகள் அவசியம் வைக்கப்படல் வேண்டும். இதற்கு உரிய அதிகாரிகள் கவனம் எடுத்துச் செயற்படுவதன் மூலம் விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளலாம் என பொதுமக்களும் வாகனச் சாரதிகளும் கோரிக்கை விடுக்கின்றனர். (77)

## வசாவிளான் கிழக்குப் பகுதி மக்கள் இதுவரை மீள்குடியமர்த்தப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வசாவிளான் கிழக்கு ஜே/245 கிராமப் பகுதி மக்கள் தாம் இதுவரை காலமும் மீள்குடியமர்த்தப்படவில்லை எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதிகளில் மிதிவெடி அகற்றும் பிரிவினரால் கண்ணிவெடி அகற்றப்பட்டும் இப்பகுதி மக்களை மீள்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

கடந்த 22 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து உறவினர் வீடுகளிலும் முகாம்களிலும் தாம் வாழ்க்கை நடத்தி வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எமது சொந்த மண்ணில் வாழ்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பாரம்பரிய கைததொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கைகள் முன்வைத்ததாகவும், தமது மண்ணில் வாழ்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறும் அப்பகுதி மக்கள் கோரிக்கைகள் விடுக்கின்றனர். (எஸ்)





காரைநகர் மணிவாசகர் சபையின் 57 ஆவது மணிவாசகர் முதல்நாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றது. இதில் காரைநகர் சிவன் ஆலய தர்மகர்த்தாவும் சபைத் தலைவரும் இணைந்து கலாநிதி ஆறு.திருமுருகனுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்து வாழ்த்துப்பா வழங்குவதையும், வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் காணலாம். (50)

## நிதி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

ஈழத்து சிதம்பரத்தின் மாணிக்கவாசகர் அன்னதான சபைக்கு கனடா காரை. கலாசார மன்றம் இம்முறை 50 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

திருவெம்பாவை உற்சவத்தை முன்னிட்டு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் முகமாக இந்நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மணிவாசகர் சபைக்கும் இம்மன்றம் 25 ஆயிரம் ரூபாவை சபைத் தலைவரிடம் மன்றச் செயலாளர் வழங்கியுள்ளார்.

# யாழ். கூட்டுறவுச் சபையில் 7227 சங்கங்கள் இணைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டக் கூட்டுறவு சபையில் 7227 சங்கங்கள் இணைக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவுச் சபை புள்ளிவிபரத்தில் இருந்து தெரியவருகின்றது.

கடந்த 2011ஆம் ஆண்டில் 24 பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களும், 19 பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களும், 18 இரண்டாம்படி சங்கங்களும் 786 சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களும், 133 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களும், 02 கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் 24 ஏனைய சங்கங்களும், 6187 பாடசாலை கூட்டுறவுச் சங்கங்களும் கூட்டுறவுச்சபையில் இணைந்துள்ளன.

அதேவேளை பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் 624 கிளைகளிலும் 204988ஆண்களும், 61309 பெண்களும் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் 19 கிளைகளிலும், 21274 ஆண்களும் 522பெண்களும், இண்டாம்படி சங்கங்களில் ஆண், பெண் அடங்கலாக 860 பேரும், சிங்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களில் ஆண், பெண் அடங்கலாக 43536 பேரும், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 17696 ஆண்களும், 2665 பெண்களும் கூட்டுறவுச் சபையின் அங்கத்தவர்களாக உள்வாங்கப்பட்டுள்ளார்கள் என யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை செயலாளர் தெரிவித்துள்ளார். (எஸ்)

# புனரமைக்கப்படாதுள்ள மணிக்கூட்டுக்கோபுர வீதி

(குருநகர்)

யாழ். மணிக்கூட்டுக்கோபுரச் சுற்றுவட்டம் இன்னமும் புனரமைக்கப்படாமலேயே இருந்து வருகிறது.

மேற்படி சுற்று வட்டத்தைச்சேர்கின்ற வீதிகளில் வேம்படி வீதி மட்டும் காபற் வீதியாக மாற்றம் அடைந்துள்ளது.

ஆஸ்பத்திரி வீதியில் இருந்து மணிக்கூட்டுக் கோபுரத்தைச் சென்றடையும் மணிக்கூட்டு வீதியின் ஒருபகுதி பாவனைக்கு உதவாத முறையில் சேதமடைந்து காணப்படுகிறது.

அதேவேளை போதனா வைத்தியசாலையைத் தாண்டிச் செல்கின்ற மணிக்கூட்டு வீதியின் மறுபகுதியிலும் நாவலர் வீதி வரையான பகுதிகளில் இதுவரை திருத்தவேலைகள் மேற்கொள்ளப்படவில்லை. கன்னாதிட்டி வீதிச்சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள வடிகால் பாலவேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட போதும் வீதி சமச்சீர் செய்யப்படாமல் இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (68)




அருளானந்தம் கென்றியின் தயாரிப்பில் ஜேம்ஸ் அன்ரனின் இசையில் உருவான டிசம்பர் -2 என்னும் இறுவெட்டு வெளியீட்டு விழா அண்மையில் யாழ். மறைக்கல்வி நடுநிலையமண்டபத்தில் நடைபெற்ற போது பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட யாழ். அடைக்கல அன்னை பங்குத் தந்தை அருட்திரு. றெஜிராஜேஸ்வரனிடம் நூல் கையளிக்கப்படுவதைக் காணலாம். (20)

# சிங்கள பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்கள் பாடசாலைகளில் நியமிக்கப்பட வேண்டும்

## பெற்றோர்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் சிங்கள பாடத்தைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்கள் அப்பாடத்தைக் கற்க முடியாத நிலை காணப்படுவதாக மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய பாடத்திட்டத்தில் சிங்கள பாடமும் ஒரு பாடவேளையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், சிங்களம் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் இல்லாது மாணவர்கள் சிங்களப் புத்தகத்தை பாடசாலைக்கு கொண்டு சென்று மீண்டும் திரும்பிக் கொண்டு வருவதாக பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் வேறுபாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களில் சிங்களத்தைக் கற்றுக் கொண்ட ஆசிரியர்களால் சிங்களபாடம் கற்பிக்கப்பட்டு வருகிறது.

இதேபோல கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளிலும் சிங்களம் தெரிந்த ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டால் அவர்கள் மூலம் சிங்கள பாடத்தை மாணவர்கள் கற்க முடியும் என பெற்றோர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தற்போது ஆங்கில பாடத்திற்கு முக்கியத்துவம் வழங்கி கற்பிக்கப்படும் நிலையில், சிங்கள பாடத்தையும் மாணவர்கள் கட்டாயம் கற்கவேண்டிய நிலை காணப்படுவதாக பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். (77)

# தொழில் பயிற்சி கருத்தரங்கு

என்.வி.கியூ. தர சான்றிதழினை பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் அதன் பிரயோகம் தொடர்பாகவும் தெளிவு படுத்தும் கருத்தரங்கு தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் தலைமை அலுவலக உத்தியோகத்தர்களால் எதிர்வரும் 12ஆம் திகதி யாழ்.செயலகத்தில் நடாத்த இருப்பதால் கைத்தொழில் பயிற்சி நெறியை மேற்கொள்ளும் மற்றும் பூர்த்தி செய்த மாணவர்களை கலந்து பயன்பெறுமாறு யாழ். கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை கேட்டுள்ளது.

# பாலர் பகல் விடுதி புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி தெற்கு கந்தசுவாமி கோவில் தெற்கு வீதியில் அமைந்துள்ள பாலர் பகல் விடுதி புதுப்பொலிவு பெற்று வருகின்றது. நீர்வேலி நலன்புரிச்சங்கம் இலண்டன் அமைப்பினரின் ஆதரவுடன் பாலர் பகல் விடுதிக்கான வர்ணம் பூசும் பணிகள் நீர்வேலி நலன்புரிச் சங்கம் லண்டனின் நீர்வேலிக் கிளையினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை இங்கு கல்வியிலும் மாணவர்களின் பொழுதுபோக்கை கருத்தில் கொண்டு தொலைக்காட்சி ஒன்றை வழங்குவதற்கும் இவ் அமைப்பின் செயலாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


# நீதிமன்றில் வழக்குத்தாக்கல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பணிப்பிற்கமைய பொதுசுகாதார பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு எதிராக யாழ். பொலிஸாரினால் யாழ். நீதிமன்றில் நேற்று முன்தினம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

யாழ் நகரப் பகுதியில் காணப்படும் கடைகள் மற்றும் வீதிகள், வாய்க்கால்கள், போன்றவற்றின் சுத்தம் தொடர்பாக பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கினை விசாரணை செய்த நீதவான் நீதிமன்ற நீதிபதி மா. கணேசராசா குறித்த அதிகாரிகளுக்கு நாளை செவ்வாய்க்கிழமை மேற்படி பரிசோதனை செய்யப்பட்ட அறிக்கையை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார். (எஸ்)




வேலியே பயிரை மேயுறது எண்டு சும்மாவா சொல்லி வைச்சாங்கள்? இது ஒரு குறியீட்டுச் சொல். உண்மையில் வேலி பயிரை மேய்வதில்லைதானே!

சட்டம் ஒழுங்கை நிலை நாட்ட வேண்டியவர்களின் சீத்துவக் கேடு நாடு முழுக்கவே நாறிக் கிடக்கு.

குற்றவாளிகளை உருவாக்குபவர்கள் அவர்களாகத்தான் இருக்கிறார்கள். உங்களுக்கு இப்ப விளங்கி இருக்கும். ஆரைச் சொல்ல வாறனெண்டு.

யாழ். பிரதேசத்திற்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தமிழரான உதவிச் சுப்பிறிண்டன் அவர்களிடம் உருக்கமான வேண்டுதல் ஒண்டை விடுத்திருந்தே எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்ததைப் பாத்திருப்பியள்.

அதாவது முறைப்பாடு செய்யப்போகின்ற பெண்களிடம் தொலைபேசி இலக்கங்களைக் கேட்பதைக் கைவிடுமாறு அவர் கேட்டிருந்தார்.

இந்தளவுக்கு அந்தத்துறை மோசமான அளவுக்குக் கீழ்ப்போக யானை தனக்குத்தானே மண்ணை அள்ளிப் போடும் என்பது போல் அவர்களே தேடிக்கொண்டதுதான்.

இல்லாட்டில் நீதிமன்றத்துக்குள்ளே வைத்து சந்தேக நபரொருவரைக் தாக்கி இருப்பார்களா? நீதிக்கு எங்கே இப்ப மதிப்பிருக்குச் சொல்லுங்க பாப்பம்?

அதனால வழக்குரைஞர்கள் சில தினங்கள் நீதிமன்றில் வழக்குரைக்கப் போகாமல் பகிஷ்கரித்த விசயமெல்லாம் பகிரங்கமான ஒரு சங்கதி. அந்தத் தாக்குதலை நடத்தி இருந்த புறநகர் பிரிவு நிலையத்தில் நடந்த சம்பவமொன்றை சொல்லப்போறன். கல்வியங்காடு செங்குந்தா மகா வித்தியாலயச் சூழலில் என்ரை பெறா மகள் வீட்டில் அவள் தனியே குழந்தையுடன் தங்கி இருந்த வேளை ஜன்னல் ஊடாக மயக்க மருந்து விசிறித் திருட்டுச் சம்பவமொன்று நடந்தேறியது.

ஏறத்தாழ 5 லட்சத்துக்கு மேல் நகை. தொலைபேசி, டொலர் நாயணம் என்பன திருடப்பட்டிருந்தன. இதனை முறைப்பாடு பதிய குறிப்பிட்ட நிலையத்திற்கு சென்றிருந்தாள் .

என்ன ஆனாலும் அவர்களிடம்தானே செல்லவேண்டும். அதுதான் சட்டம் ஒழுங்கு.

அங்கே அவர்கள் இவளிடம் முறைப்பாட்டை பதிந்து கொண்டு ஏதோ திருட்டைச் செய்த குற்றவாளியை அணுகுவதுபோல்...

நீ யாரை வரச் சொல்லிப்போட்டுக் கிடந்தனி... புருசன் எங்கை... அப்புடி இப்புடி எண்டு வரம்பை மீறியெல்லாம் பேசி இருக்கிறார்கள்.

அப்புடி யெண்டால் இவை மக்கள் சேவை, சட்டம் ஒழுங்கெண்டு எதனைச் சொல்கிறார்கள்?

வேலியே பயிரை மேய்ந்தால் வேளாமைக்கு எங்க போறது? சொல்லுங்க பாப்பம்...

# முரசின் இன்றைய பலன்

(09.01.2012 -திங்கட்கிழமை)

கர வருஷம் மார்கழி 24 ஆம் திகதி பூரணை
பிறபகல் 1.41 வரை. நட்சத்திரம் புனர்பூசம் பின்இரவு 6.16 வரை.
அமிர்தசித்தம்
இராகுகாலம் 8.02 - 9.32வரை. சுபநேரம் 12.32-2.02 மணிவரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் :- | பணவரவு, தொழில் விருத்தி, சுபகாரியம், பிரச்சினைகள். |
| ரிஷபம:- | திடீர் நன்மை, அதிர்ஷ்டம், மகிழ்ச்சி, சொத்து சேரும். |
| மிதுனம் :- | பொருள்வரவு, மறதி, அலைச்சல், இடமாற்றம். |
| கடகம் :- | கழனஉழைப்பு, தனலாபம், சொத்துசேரும், பதவி உயர்வு. |
| சிம்மம் :- | நன்மதிப்பு, வெற்றி, ஆரோக்கியம், உற்சாகம். |
| கனனி :- | பதவி லாபம், அதிர்ஷ்டம், நாணயம் தவறும், பணத்தட்டுப்பாடு. |
| துலாம் :- | பயணநினைவு, சொத்துச்சிக்கல், அரச உதவி, நிம்மதி. |
| விருச்சிகம்- | நல்லதகவல், செல்வாக்கு உயரும், ஆரோக்கியம், பிரயாணம். |
| தனுசு :- | அதிகாரிகள் சகாயம், கெடுபிடி, அதிர்ஷ்டம், உடல் உபாதை. |
| மகரம :- | கஷ்டம் நீங்கும், சஞ்சலம், உற்சாகம், வெற்றிமேல்வெற்றி. |
| கும்பம் :- | கடன் நிவர்த்தி, செலவு, இல்லறச் சிறப்பு, காரிய சித்தி. |
| மீனம் :- | உற்சாகம், பகைகுரோதம், சுபகாரியம், பணப்புழக்கம். |

# சுயநிர்ணய உரிமை பற்றி...

சுயநிர்ணய உரிமை தொடர்பான சர்வதேச சட்டத்தினதும் சர்வதேச தொடர்புகளினதும் நடைமுறைச் சாத்தியமான புரிதல்கள் தமிழர்களின் சுய நிர்ணயக் கோரிக்கையினை வலியுறுத்தும் போது கவனத்தில் எடுக்கப்பட்டனவா என்ற கேள்வியினை முதலில் கேட்க வேண்டியுள்ளது.

இலங்கையில் தமிழ் இனம் தேசிய இனம் என்பதனையும், இத் தேசிய இனத்திற்கு சுய நிர்ணய உரிமை உண்டு என்பதனையும் நான் நம்புகிறேன். எனினும், பேராசிரியர் சிற்றம்பலம் விவாதிக்கும் சுயநிர்ணய உரிமை தொடர்பிலோ, ராயப்பு ஜோசப் ஆண்டகை உட்பட தமிழ் புத்திஜீவிகள் மறைமுகமான அர்த்தத்தை வெளிப்படுத்தும் அர்த்தம் தொடர்பிலோ மாறுபட்ட கருத்தினை இந்த உரிமைகள் விடயத்தில் கொண்டிருக்கின்றேன்.

நான் மாக்சிய சிந்தனையின் அடிப்படையில் எனது விளக்கத்தினை முன்வைக்கிறேன். மாக்சிய சிந்தனையிலும் சுய நிர்ணய உரிமை தொடர்பில் ஏகோபித்த கருத்து நிலை இல்லாதிருந்தது. அதேபோன்று 20 ஆம் நூற்றாண்டில் சுயநிர்ணய உரிமையினை வேறுபட்ட உள்ளடக்கத்தில் வேறுபட்ட அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டதனை அரசியல் விஞ்ஞானத்தின் இலக்கியம் எமக்கு உணர்த்தி நிற்கின்றது. இதனாலேயே சுயநிர்ணய உரிமை என்பது தெளிவாகக் கூறுவதாயின் சார்புநிலை உடன்பாட்டுத் தன்மை (Relative of consensus Driven) கொண்ட கோட்பாடு (Aboslute Concept) அல்ல. இதனால் இந்த கோட்பாட்டினை நடைமுறைச் சாத்தியமானதாகவும், நெகிழ்வுத்தன்மை கொண்டதாகவும் (Pragm -atic of Flexivle) பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு நிலை உள்ளது.



தேசிய இனத்தின் கௌரவத்தினை பாதுகாத்துக் கொண்டு பிரிந்து செல்லாமல் ஒன்றிணைந்து வாழக்கூடிய அரசியல் சமூகம் ஒன்றினை உருவாக்கும் நோக்கத்துடனேயே நான் அவ்வாறு கூறுகின்றேன். இன்று பெரும்பாலானவர்கள் மாக்சிசத்தை மறந்த நிலையில், சுயநிர்ணய உரிமையினை மாக்சின் ஊடாகப் பேசுவது என்பது கடினமானதாக இருக்கக்கூடும். எனினும் மாக்சின் கருத்தின்படி இனங்களின் சுய நிர்ணய உரிமை என்பது ஜனநாயகத்தின் அத்திவாரமாகும். இதனாலேயே சோவியத் நாடுகளின் முன்னுதாரணத்தின் அடிப்படையில் 20 ஆம் நுற்றாண்டின் நடுப்பாகத்தில் ஐ.நா.வின் பொருளாதார சமூகக் கலாசார உரிமைகள் பற்றிய உடன்பாட்டின் முதலாவது சாரத்திலும் ஐ.நா.வின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றி உடன்பாட்டிலும் மக்களின் சுயநிர்ணய உரிமை குறிப்பிடப் பட்டுள்ளது.

மார்க்சிசத்திலும் இனங்களின் சுயநிர்ணய உரிமை மற்றும் பிரிந்து செல்லும் உரிமை குறித்து ஒருமித்த நிலைப்பாடு இருக்கவில்லை எனபதே இதற்குக் காரணமாகும். ஆரம்பத்தில் அயர்லாந்து இனத்தவர்களின் சமய நிர்ணய உரிமையுடன் பிரிந்து செல்லும் உரிமையினை இணைக்க வேண்டாம் என்று கூறிய மார்க்ஸ், பின்பு அதனை மாற்றியமைத்து சுயநிர்ணய உரிமையுடன் பிரிந்து செல்லும் உரிமையினை ஒன்றிணைத்தார். எனினும் மார்க்சிசத்தினைக் கற்பவர்கள் அவரின் இந்த விளக்கத்திற்கான காரணத்தினையும், பின்னணியினையும் விளங்கிக்கொள்வது அவசியமாகும். பெரும்பாலான மார்க்சியவாதிகள் இதனை வேதவாக்காகக் கருதுகின்றனர். எனினும், லெனின் பின்லாந்து மற்றும் ஸ்வீடன் பற்றிய சுய நிர்ணய உரிமை மற்றும் ஸ்வீடன் பற்றிய சுய நிர்ணய உரிமை மற்றும் பிரிந்து செல்லும் உரிமையினை விளக்கும்போதும், ஸ்டாலின் டக்ரேன் தொடர்பாகவும் வேறுபட்ட கருத்துக்களைத தெரிவித்திருந்தனர்.


மார்க்சியவாத கருத்து நிலைக்கு அப்பால் அதன்பின் இனங்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பில் முதலாம் உலகப் போரின் பின்பு அமெரிக்க ஜனாதிபதி உட்ரோ வில்சன் தேசிய அரசுகள் தொடர்பான கோட்பாட்டினை முன்வைத்தார். அதன் பின்பு ஏகாதிபத்தியத்திலிருந்து விடுபடுவதற்கான இனங்களுக்கு உள்ள உரிமையின் பிரகாரமே இனங்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டன.

எவ்வாறாயினும், சோவியத் தேசத்தின் ஊடாகவும், பொல்டிக் அரசுகளான லித்துவேனியா, மசிடோனியா, மோல்ட்டோமியா ஆகிய நாடுகள் பிரிவுபடுதல் தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பின் ஊடாகவும், கனடா மற்றும் அங்கு வாழும் பிரான்ஸிய மொழிபேசும் மக்களைக் கொண்ட கியூபெக் மக்களுக்கு சுயநிர்ணயத்திற்கான உரிமை உண்டு எனவும் கனடிய உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் ஊடாகவும் சுயநிர்ணய உரிமை மற்றும் பிரிந்து செல்லும் உரிமை தொடர்பாக பரஸ்பரம் முரணான விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றைக் கருத்திற்கொண்டு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர், இனத்தின் உள்ளகக் காரணிகளின் அடிப்படையில் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிடத் தலைப்பட்டார். பின்பு அதனை புலிகளே நிராகரித்தாலும் இலங்கைக்குப் பொருந்தும் அரசியல் யதார்த்தமும் அதுவே எனலாம். திம்புக் கொள்கை ஒஸ்லோ இணக்கப்பாட்டின் அடிப்படையில் விளங்கிக்கொள்ள வேண்டியதாகும். இதன்படி பார்த்தால் பிரிந்து செல்லும் உரிமையும், கொன்பெடரலக் தீர்வும் வரலாறாகிவிட்ட கோட்பாடுகள் அல்லவா?

**ஷிரால் லக்திலக கட்டுரையிலிருந்து**

## விருதுபெற்ற புகைப்படம்



சிலந்தி வலையைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம். சிலந்திப் பூச்சிகளின் வாயிலிருந்து வெளிப்படும் உமிழ் நீரால் பின்னப்படும் இந்த வலைகள், பார்ப்பதற்கே மிகவும் அழகாக இருக்கும். ஒரு பூச்சியால், இத்தனை நேர்த்தியாக ஒரு வலையை உருவாக்க முடியுமா என்ற ஆச்சரியம் எழும் அளவுக்கு, அது ஒரு இயற்கை அதிசயமாகவே விளங்குகிறது. தனக்கு தேவையான இரையை பிடிப்பதற்கும், பாதுகாப்பாக வசிப்பதற்கும், இந்த வலைகளை சிலந்திப் பூச்சிகள் பயன்படுத்துகின்றன. மிக மென்மையானதாகத் தெரியும் இந்த நூல் திரண்டால் மிக உறுதியானது என்பதை வைத்தே Spider man திரைப்படங்கள் உருவாகின.இப்போது அது அல்ல விஷயம். பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் கடந்தாண்டு வரலாறு காணாத அளவுக்கு, வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது அல்லவா? அப்போது, அங்கு பெரும்பாலான பகுதிகள் நீரில் மூழ்கி விட்டன. இந்த வெள்ள நீர் வடிவதற்கு, பல நாட்கள் ஆகி விட்டன. இதனால், அங்கு வசித்த பல உயிரினங்கள், இறந்து விட்டன. ஆனால், சிலந்திப் பூச்சிகள் அனைத்தும், உயிர் தப்பிப்பதற்காக அந்தப் பகுதிகளில் உள்ள மரங்களின் மீது ஏறி விட்டன.

தண்ணீர் வ்டிவதற்கு பல நாட்கள் ஆகி விட்டதால், அந்த மரங்களிலேயே, வசிக்கத் தொடங்கி விட்டன. இதற்காக அந்த சிலந்திகள் கட்டிய வலைகள், அந்தப் பகுதிகளில் உள்ள மரங்கள் முழுவதையும் மூடி விட்டது. சிலந்தி வலைகளால் ஆன மரங்களின் தோற்றம், பார்ப்பதற்கு மிகவும் வித்தியாசமாக காணப்பட்டது. பார்த்த மக்கள், ஆச்சரியப்பட்டனர். அந்த சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட்ட இந்தப் புகைப்படத்துக்கு, சிறந்த புகைப்படத்துக்கான விருது கிடைத்துள்ளது.

# சிங்கள மக்களை அணுகுதல்

அரைகுறைத் தீர்வுகளை நிராகரிக்க வேண்டும் என்ற கருத்தும் ஆக்கபூர்வமானதல்ல. அரைகுறைத் தீர்வு எனக் கூறித் தமிழ்த் தலைவர்கள் நிராகரித்தவற்றுள் மாகாண சபையையும் சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வு ஆலோசனைகளையும் பிரதானமாகக் கூறலாம். இவையிரண்டும தமிழ்த் தலைமைக்குக் கிடைத்த நல்ல சந்தர்ப்பங்கள். சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வு ஆலோசனைகள் சமஷ்டி ஆட்சி முறைக்கு மிக அண்மையானவை. இவ்விரு சந்தர்ப்பங்களையும் அளந்ததன் பாரதூரமான விளைவை இன்று கண்கூடாகக் காண்கின்றோம்.

அரைகுறைத் தீர்வுகளை நிராகரிக்க வேண்டும் என்ற கருத்து சர்வதேசத்தின் மீதுள்ள நம்பிக்கையுடன் சம்பந்தப்பட்டது. அத்தகைய தீர்வுகள் தமிழ் மக்களுக்குத் திருப்தியளிக்கின்றன என்று சர்வதேசம் தவறாக விளங்கிக்கொண்டு விடும் என்பதே மாகாண சபையையும் அதிகாரப் பகிர்வு ஆலோசனைகளையும் எதிர்த்ததற்குச் சொல்லப்பட்ட பிரதான காரணம். இவற்றை அன்று நிராகரித்தவர்கள் இன்று மாகாண சபையை முழுமையாகத் தக்க வைப்பதற்காகப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய நிலைக்கு வந்திருக்கின்றார்கள்.

முழுமையான அரசியல் தீர்வை ஒரே நேரத்தில் பெறக்கூடியதாக இன்றைய சூழ்நிலை இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். கிடைக்கும் அதிகாரங்களை ஏற்றுக்கொண்டு மேலதிக அதிகாரங்களுக்காகத் தொடர்ந்து முயற்சிக்கும் அணுகுமுறையே ஆக்கபூர்வ மானது. இதன்மூலம் முழுமையான அரசியல் தீர்வை நோக்கி நகர முடியும். பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தம் கிடைத்திருக்கும் அதிகாரம் அரசாங்கத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்தும் பேச்சுவார்த்தை இந்த அதிகாரங்களைப் பாதுகாப்பதையும், மேலதிகமாகச் சில அதிகாரங்களைப் பெறுவதையும் இலக்காகக் கொண்டிருத்தல் வேண்டும். அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துகின்ற அதேவேளை, அரசாங்கத்துக்கு அப்பால் சிங்கள மக்களை அணுகுவதற்கான வழிமுறைகள் பற்றியும் தமிழ்த் தலைவர்கள் சிந்திக்க வேண்டும். இரண்டு காரணங்களுக்காக இது அத்தியாவசியமானதாகின்றது.

மேலதிக அதிகாரங்களைப் பெறுவது அரசியலமைப்புத் திருத்தம் சம்பந்தப்படும் விடயம். முன்னைய காலங்களில் அரசியலமைப்புத் திருத்த நடைமுறையில் நாடாளுமன்றமே இறுதிக்கட்டம். நாடாளுமன்றத்தில் மூன்றிலொரு பெரும்பான்மையுடன் நிறைவேறியதும் திருத்தம் நடைமுறைக்கு வரும். இப்போது அவ்வாறில்லை. சர்வஜன வாக்கெடுப்பில் மக்களின் சம்மதத்தையும் பெறவேண்டும். அதாவது இறுதி அங்கீகாரத்தை வழங்குபவர்கள் மக்களே. தேசிய ரீதியிலான வாக்கெடுப்பில் பெரும்பான்மையைப் பெறுவதற்குச் சிங்கள மக்களின் வாக்குகள் அத்தியாவசியமானவை என்பதால் சிங்கள மக்களை நேரடியாக அணுக வேண்டிய தேவை உள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக் கோரிக்கை தொடர்பாகச் சிங்கள மக்கள் கொண்டிருக்கும் தப்பான எண்ணங்களையப்படுவதன் மூலம் அரசாங்கத்துக்கூடாக அல்லாமல் நேரடியாக அவர்களின் ஆதரவைப் பெற முடியும். சிங்கள மக்கள் மத்தியில் சாதகமான நிலைப்பாடு ஏற்படுவது அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையில் சாதகமான திருப்பம் ஏற்படுவதற்குக் காரணமாகலாம். இந்த நடைமுறையைத் தொடக்கி வைக்க வேண்டிய பிரதான பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சார்ந்தது.

**- சிவா சுப்பிரமணியம் கட்டுரையிலிருந்து...**

## விரிசல்



சுவரில் சின்னதாகத்தான்
ஆரம்பமானது
நகக் கீறலைப் போல.

அப்போது எனக்கு
ஒன்றும் தோன்றவில்லை.

சிறிது சிறிதாகப் பெரிதாகின்றபோதும்,
அது
ஓடுகிற வளைவின் அழகில்
லயித்திருந்தேன்,
தடுத்து நிறுத்த வேண்டுமென்னும்
பிரக்ஞையற்று.

பெரிதான பின்பும்
என்ன காரணம்,
யார் பொறுப்பென்று
சந்தேகந் தீர்வதில் முனைந்திருந்தேன்.

வாய் பிளந்து
இடிந்தே விழுந்துவிடும் என்றான
போதும்,
இடிபாடுகளிலிருந்து
எதைத் தக்கவைக்கலாம் என்றே
யோசித்திருக்கிறேன்.

எனக்கும்
என் வீடு என்று காலமூந்திக் கொண்டாட
உண்டு உரிமை.

பிளவுகளுக்கு மட்டும் பொறுப்பேற்று
கன்னம் சாய்த்துக் கவலைப்பட
பிறிதொருவர் அகப்படாரா?

– வெ. இறையன்பு

# போட்டோஷொப் கும்மாளம்


பெற்றோல் விலை உயர்வு, பேருந்துக்கட்டணம் உயர்வு, எரிவாயு தட்டுப்பாடு... உயர்வு, தட்டுப்பாடு என்று சாதாரண மனிதனுக்கு இரத்த அழுத்தத்தை எகிறவைக்கும் பிரச்சினைகள் ஏராளம்.. ஏராளம்.. இன்றைய ஐ.டி. கலாசார இளைஞர்கள் இதற்காகவெல்லாம் தெருவுக்கு வந்து போராடு கிறார்களோ இல்லையோ.. இணையத்தில் ஃபேஸ புக்கிலோ, டுவிட்டரிலோ நாலு வரி கிண்டலாக எழுதி விட்டு 'ரிலாக்ஸ்' ஆகத் தொடங்கி விட்டார்கள்.

எவ்வளவு பெரிய பிரபலமாக இருந்தாலும் சரி. இந்த சமூக வலைத்தளத்தில் இயங்குபவர்களிடம் மாட்டிக்கொண்டால் அதோகதிதான். கொஞ்சம் போட்டோஷொப்பில் விளையாடத் தெரிந்தவர்களாக அவர்கள் இருந்துவிட்டால் தொலைந்தார்கள். வி.ஐ.பி.களின் முகத்தை மட்டும் வெட்டியெடுத்து, வேறு ஏதாவது ஒரு படத்தில் பொருத்தி நொடியில் உலகமெல்லாம் காண செய்துவிடுகிறார்கள்.

தற்சமயம் இவர்களிடம் மாட்டிக் கொண்டு பெருமளவு அவதிப் படும் பிரபலம் மன்மோகன்சிங் தான். ஏனோ அவரது முகத்தைப் பார்த்தாலே வெட்டி, எங்காவது ஒட்டியாகவேண்டும் என்று இவர்களுக்கு 'கொலைவெறி' ஏற்பட்டு விடுகிறது. சோனியா, கலைஞர், ஜெயலலிதா, விஜயகாந்த் என்று அன்றன்றைய அவர்களது அறிக்கைகள், செயற்பாடுகளை பொறுத்து, இவர்களது 'கருத்துப் படம்' அமையும்.


ஏதோ பகிடிக்கோ, பொழுது போக்குக்கோ இதையெல்லாம் இவர்கள் செய்து கொண்டிருக் கிறார்கள் என்றில்லை. அரசியல் தலைவர்கள், பிரபலங்கள் மீதான தங்களது கோபத்துக்குவடிகாலாகவும் இணையத்தை இவர்கள் பயன்படுத்து கிறார்கள்.


இதோ சில உதாரணங்களைப் பாருங்கள்!










# விளாடிமிர் நபக்கோவ் கடிதம்

**லோலிதா நாவல், 1955 இல் பிரான்சில் வெளியானதிலிருந்து தொடர்ந்து சர்ச்சைகளைச் சந்தித்து வந்தது. டீன் ஏஜ் யுவதி மீதான நடுவயது ஆணின் தாபமும் அந்த யுவதியின் மயக்கும் வசீகரமுமே அந்த நாவலின் கதைக்கரு. இந்தக் கடிதம் 1956 இல் மோரிஸ் பிகூஷ் என்ற நண்பருக்கு எழுத்தாளர் நபக்கோவால் எழுதப்பட்டது. இதில், அவரது சிறந்த நூல் குறித்த சர்ச்சைக்கான அருமையான எதிர்வினையைப் பார்க்கலாம். இந்த சர்ச்சை வளர்ந்து சில மாதங்களிலேயே லோலிதா பிரிட்டனிலும், பிரான்சிலும் தற்காலிகமாக தடைசெய்யப்பட்டது.**

**அன்புக்குரிய மோரிஸ்,**

உங்களது கடிதம் கிடைத்தபோது மகிழ்ச்சியாக இருந்தது. லோலிதாவை காலிமார்ட் பதிப்பகம் பிரசுரிக்க விரும்புவதாக தற்போதுதான் அறிந்தேன். லோலிதாவுக்கு மரியாதைக்குரிய முகவரி கிடைக்கும். லண்டனிலும் பரீசிலும் இந்தப் புத்தகம் வெற்றி பெற்றுள்ளது. அன்பு நண்பரே, லோலிதாவை முடிவு வரை படியுங்கள். வெளிப்படையாகச் சொல்வதானால் நான் கோபமாக இருக்கும் கலாச்சார அதிகாரிகள் குறித்து கவலைப்படவேயில்லை. கலைமனம் இல்லாத இந்த தரம்கெட்ட கும்பலுக்கு நான் கார்னல் பல்கலைக்கழகத்தில் யுலிசஸ் பற்றிய பகுப்பாய்வை 250 ஆண், பெண் மாணவர்களிடம் நடத்தினேன் என்ற சேதி தெரிந்தால் கூடுதலாக அதிர்ச்சியடைவார்கள். எனது தீவிரமான கலைப்படைப்பு லோலிதா என்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கை உள்ளது. எந்த நீதிமன்றமும் கீழ்த்தரமான படைப்பு என்று இதை நிரூபிக்க முடியாது. ஒரு நுட்பமான கவிஞன் எழுதிய காமடி ஆப் மேனர்சில் ஆபாசமான பகுதியும் உண்டு. ஆனால் லோலிதாவோ துயரமுடிவைக் கொண்டதாகும். காம இலக்கியம் என்பதை பின்னணியிலிருந்து தனியாகப் பிரிக்கமுடியாது. காம இலக்கியம் என்பது அணுகுமுறையும், நோக்கம் கொண்டதுமாகும். துயரமும் ஆபாசமும் ஒன்றையொன்று விலக்குபவை.

என்னைப் போலவே இதெல்லாம் உங்களுக்கும் புரியும். இந்த விஷயங்களை இங்கே குறிப்பிடுகிறேன். ஏனெனில் நீங்கள் இந்த தாக்குதலுக்கான சாத்தியம் குறித்து குழப்பம் கொண்டிருக்கலாம்.

**உங்கள் மூவருக்கும் எனது அன்பு**
**விளாடிமிர்**

# உயர நீர்வீழ்ச்சி எது?



காந்தி ஒருமுறை ஷிமோகாவுக்குச் சென்றிருந்தார். அவருடன் காகா கலேல்கர் போன்றவர்களும் உடன் சென்றிருந்தனர். கலேல்கர் காந்தியடிகளிடம், 'இங்கே கெரலப்பா நீர் வீழ்ச்சியை நாம் பார்க்க வேண்டாமா?' என்று கேட்டார்.


'எனக்கு நிறைய வேலைகள் இருக்கிறது' என்றார் காந்தி. 'இவ்வளவு தொலைவு வந்தும் இந்த நீர்வீழ்ச்சியைப் பார்க்காமல் போகலாமா? மறுபடியும் இங்கே வருகிறோமோ, என்னமோ?' என்றார் கலேல்கர்.

'எனக்கு இப்படியெல்லாம் மனம்போன போக்கில் சுற்றிக்கொண்டிருக்க நேரமில்லை. நீங்கள் வேண்டுமானால் பார்த்துவிட்டு வாருங்கள். மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க உங்களுக்கு ஏதேனும் புதிய செய்திகள் கிடைக்கலாம்' என்றார் காந்தி.

'உலகச் சிறப்புற்ற நயாகரா நீர்வீழ்ச்சியைவிடவும் இது மிக உயரத்திலிருந்து வீழ்கிறதாம் இதை நீங்கள் அவசியம் பார்த்துத்தான் ஆக வேண்டும்' என்று மீண்டும் வலியுறுத்தினார் கலேல்கர்.

'இதிலென்ன அதிசயம்? நான் இதைவிடவும் உயரமாய் ஆகாயத்திலிருந்தே கொட்டும் மழையைப் பார்த்திருக்கிறேனே!' என்று சொல்லிவிட்டு நடையைக் கட்டினார் காந்தி.

# எல்லோரும் கொண்டாடும் "கொ(ை)லவெறி, பற்றி மேலும்




ரஜினிகாந்தின் மூத்த மகள் ஐஸ்வர்யா இயக்கி, அவரது கணவரும் நடிகருமான தனுஷ் நாயகனாக நடிக்க, கமல்ஹாசனின் மகள் ஸ்ருதிஹாசன் நாயகியாக நடிக்கும் 3 திரைப்படம் இன்னும் வெளியாகவில்லை. அந்தப் படத்தில் வை திஸ் கொலவெறிடி என்று தனுஷ் எழுதி. பாடியிருக்கும் பாடல் இணைய உலகில் நேரடியாக நவம்பர் 16 அன்று வெளியிடப்பட்டது. உலக அளவில் இளைஞர்களைக் கிறுக்குப்பிடிக்க வைத்திருக்கும் பாடல் ஆகிவிட்டது.

இப்பாடல் யூ டியூபில் வெளியான மறுநாள், தேசிய முக்கியத்துவம் கொண்ட செய்திகளையே மிகவும் தேர்ந்தெடுத்து முதல் பக்கத்தில் வெளியிடும் இந்தியாவின் பிரபல ஆங்கில நாளிதழான திஹிண்டு, இப்பாடல் மூலம் இந்தியா முதிர்ச்சியடைந்துவிட்டதாகக் கூறியது. பாடல் வெளியாகி இரண்டே வாரங்களில் உலகம் முழுக்க இப்பாடலை ஒரு கோடி பேர் பார்த்துள்ளனர்.

கொலவெறி பாடலுக்கு இசையமைத்த அனிருத் ரவிச்சந்தருக்கு வயது 21. இவர் ஐஸ்வர்யாவின் மாமா ரவிச்சந்தரின் மகன். தனது அத்தை மகள் இயக்கிய பத்து குறும்படங்களில் பள்ளியில் படிக்கும்போதிருந்தே பின்னணி இசையமைத்தவர் அனிருத். ஒரே பாடலில் உச்சத்தைத் தொட்ட அதிர்ஷ்டசாலி.

ஸ்கொட்லாந்திலிருந்து 70 வயதான ஒரு மனிதர் அனிருத்துக்கு பேஸ்புக்கில் செய்தி அனுப்பியிருக்கிறார். வை திஸ் கொலவெறிடி பாடலை ஆயிரம் தடவை கேட்டிருப்பேன். எனக்கு மொழி தெரியாது. ஆனாலும் அதை கேட்கும்போதெல்லாம் மகிழ்ச்சி அடைகிறேன் என்று சொல்லியிருக்கிறாராம்.

நடிகர் அமிதாப் பச்சன் பாடலைக் கேட்டு புல்லரித்துப் பொனதாக தனது இணையத்தில் எழுதியிருக்கிறார். ஆஷா, என்ன ஒரு பாடல். உதடுகளை விட்டு நீங்க மறுக்கும் பாடல். மனதை அப்படியே மாற்றிப் போடுகிறது. அருமையான அனுபவம். பாடலைக் கேட்கும்போதே உதடுகளில் புன்னகை வந்து உட்கார்ந்து விடுகிறது, கூடவே சிரிப்பும் வருகிறது. முகத்தில் பலவித ரசங்கள் மாறி மாறி நடனமிடுகின்றன என்று உணர்ச்சிவசப்பட்டு எழுதியிருக்கிறார்.

வை திஸ் கொலவெறிடி பாடல் இளைய தலைமுறையின் தேசிய கீதமாக எப்படி ஆனது? இன்னமும் இந்த ஆராய்ச்சி ஓயவில்லை. அழுத்தமான உணர்வுகள், மரபான அழகியல் கூறுகள் மற்றும் செவ்வியல் தன்மையுடன் இருந்த தமிழ் சினிமாப் பாடல்களில் ஏ.ஆர். ரகுமானின் வருகைக்குப் பிறகு சாதாரண குரல்களுக்கும் திரையிசையில் மதிப்பு ஏற்பட்டது. அந்தப் போக்கின் உச்சமே ஒய் திஸ் கொலவெறிடி.

'பேட்ட ராப், என்று தொடங்கி எவடி அவ என முடிந்த, காதலனில் வரும் பாடலில் இந்த மரபு தொடங்கிவைக்கப் பட்டது. ரஹ்மான் தொடங்கிவைத்ததை இன்று வெகுவாக வளர்த்தெடுக்கிறவராக விஜய் ஆண்டனி அறியப்படுகிறார். அவரது நாக்கு முக்க, 'இளைஞர்களின் ஆதர்சம்' ஆனது. யுவன் சங்கர் ராஜாவின் 'வேர் இஸ் த பார்ட்டி' இளைஞர்களின் தேசியகீதமானது. யுவனின் இசையிலேயே எவன்டி ஒன்னப் பெத்தான்... பெத்தான் பாடலும், இன்றைய கலா சலாவும் இந்த வரிசையிலேயே வருகின்றன.

இப்பாடலின் வெற்றிக்கு அதீதமான சந்தைப் படுத்தலும் காரணம் என்கிறார்கள். 90 களில் காதல் தொடர்பாக இருந்த மதிப்பீடுகளுக்கு நேரெதிரான பார்வை இன்று நம்மிடையே உள்ளது. அதை இப்பாடலிலும் பார்க்கமுடிகிறது. இசைரீதியாக நல்ல உற்சாகமான பாடலாக இருந்தாலும், பாடலின் வரிகள்தான் எல்லாரையும் கவர்ந்துள்ளது. இதையெல்லாம் மீறி இந்தப் பாடல் இத்தனை பிரபலம் பெற்றதற்குக் காரணம் ஊடகங்கள் கொடுத்த முக்கியத்துவம்தான். இதன் வெற்றிக்கு இப்படத்தின் பின்னணியில் இருக்கும் ஊடகச் செல்வாக்குள்ள குடும்பங்களும் ஒரு காரணமே.

இந்தப்பாடலை இளைய தலைமுறையின் பாடல் என்பாருமுண்டு, இணையத் தலைமுறையின் பாடல் என்போருமுண்டு. ட்விட்டர், பேஸ்புக் ஆகிய சமூக வலைத் தளங்கள் வழியாக பகிரப்படுவதன் மூலமாகவே பன்மடங்கு பெருகி கோடிக்கணக்கான பேரை எட்டியுள்ளது. அடுத்து இதே பாணியிலான ஆலு அண்டா என்றொரு பாகிஸ்தானிய பாடல் பிரபலமடைந்துவிட்டது. இனி இந்தப் பாடலுக்கு இளைஞர்கள் தாவிவிடுவார்கள்.



# தன்னிச்சையாக செயற்படுகிறார் சஜித் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பூகம்பம்

## மாத்தளை பொதுக்கூட்டத்துக்கு கண்டனம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச மாத்தளையில் தன்னிச்சையாக நடாத்திய கூட்டம் ஒன்று மேற்படி கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

மாத்தளை மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் மாநாடு என்ற போர்வையில், பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் கூட்டமொன்று இடம்பெற்றது. இருந்த போதும், எதிர்க்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவிடம் இது குறித்து வினவியபோது குறித்த சந்திப்பு தொடர்பில் தமக்கோ, கட்சியின் தலைமைக்கோ எந்தவித தகவலும் தெரியாது. இது சஜித் பிரேமதாசவின் தன்னிச்சையான நடவடிக்கை என்று அவர் வர்ணித்தார்.

அதுகுறித்து உரிய தரப்பினருக்கு அறிவித்திருக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கட்சித் தலைமைக்கு எந்தவித முன்னறிவித்தலும் விடுக்காமல் நடாத்தப்பட்ட சஜித் பிரேமதாசவின் கூட்டத்தை ஒருபோதும் அனுமதிக்க முடியாது எனவும், அதனை கட்சியின் உத்தியோகபூர்வ நிகழ்வாக கருத முடியாது எனவும் அதனைத் தாம் கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மாத்தளையில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற கூட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச, மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த அலு விகார, மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர் கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர். எவ்வாறாயினும்.

இதுகுறித்து ஐக்கிய தேசிய கட்சியின் மாத்தளை மாவட்ட தொகுதி அமைப்பாளர்கள் சிலரிடம் ஐக்கிய தேசிய கட்சியின் ஒற்றுமையை கருத்தில் கொண்டு கட்சியின் தலைமைத்துவத்துடன், ஒன்றிணைந்து செயற்படும் வகையில் விசேட யோசனையொன்றும் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# முன்னாள் புலி உறுப்பினர்கள் பொலிஸ் சேவையில் இணையலாம்

(கொழும்பு)

சிறந்த கல்வி தகைமையை கொண்ட முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு பொலிஸ் சேவையில் இணைந்து கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் திணைக்களத்தின் சட்ட திட்டங்களுக்கு அமைய, இணைந்து கொள்ள விரும்பும் இவர்கள் முறைப்படி சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார். இதேவேளை, இதுவரை சரணடைந்த 11 ஆயிரத்து 500 முன்னாள் புலி உறுப்பினர்கள், புனர்வாழ்வளிக்கப்பட்டுள்ளனர்.

தமது புனர்வாழ்வு நடவடிக்கைகயை நிறைவு செய்த இவர்கள் தற்போது சமூகத்துடன் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் ஏற்கனவே, பொலிஸில் இணைக்கப்பட்ட 600 இற்கும் மேற்பட்ட தமிழ் பொலிஸார், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சேவையாற்றுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# வீட்டுத்தோட்ட அபிவிருத்தி நாடு முழுவதும் தீவிரம்

(கொழும்பு)

திவிநெகும நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இந்த வருட இறுதிக்கு முன்னர் 25 இலட்சம் வீட்டுத் தோட்டங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி, வீட்டுக் கைத தொழில் போன்ற துறைகளை மேம்படுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் இதன் மூலம் உள்ளடக்கப்படும் என அமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்துள்ளார். இது தவிர சிறியரக ஏற்றுமதி பயிர்களை உற்பத்தி செய்வதற்கு ஏற்ற வகையில் விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளர். அத்துடன் சிறிய நீர்ப்பாசன திட்டங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் உபயோகிக்கப்படாத நிலங்களில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியும் எனவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பில் 26 பாடசாலைகள் அபிவிருத்தி செய்ய ஏற்பாடு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயற்கை அனர்த்தம் மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 26 பாடசாலைகள் முழுமையாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

நாடு முழுவதிலுமுள்ள 6,000 பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் ஜனாதிபதியின் செயற்திட்டத்தின் கீழ் இந்த 26 பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தம், சுனாமி மற்றும் வெள்ளம் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்ட பாடசாலைகளே இத்திட்டத் தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மட்டக்களப்பு மாநகர சபையினால் 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நலன்புரி சேவைகளுக்கான நிதி ஒதுக்கீட்டில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட அப்பியாச கொப்பிகள் கையளிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் மேயர் சிவ கீதா பிரபாகரன், பிரதி முதல்வர் ஜோர்ஜ்பிள்ளை உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# கட்டாக்காலி நாய்களுக்கு அழிவுகாலம் ஆரம்பம்

(கொழும்பு)

கட்டாக்காலி நாய்களைக் கொல்வது தொடர்பாக கடந்த 5 வருட காலமாக அமுலில் இருந்த தடையுத்தரவை நீக்குவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. தினமும் நாய்க்கடியினால் சுமார் 2000 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதே இதற்குக் காரணம்.

இலங்கையின் சட்டங்கள் கட்டாக்காலி மிருகங்களை அதிகாரிகள் கொல்வதற்கு அனுமதிக்கின்றன. எனினும் மிருக உரிமைக் குழுக்களின் கோரிக்கைகளைத் தொடர்ந்து கட்டாக்காலி மிருகங்களைக் கொல்வதை இடைநிறுத்த 2006 ஆம் ஆண்டு ஜனாதிபதியினால் உத்தரவிடப்பட்டது.

அதன்பின் நாய்களைக் கொல்லாமல் மலடாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது. எனினும் தற்போது இலங்கையிலுள்ள நாய்களின் எண்ணிக்கை 30 இலட்சமாக அதிகரித்துள்ளதுடன் இலங்கையிலுள்ள 2 கோடி மக்களின் ஆரோக்கிய பிரச்சினையாகவும் கட்டாக்காலி நாய்கள் உள்ளன.

இந்நிலையிலேயே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளபபட்டுள்ளது. இது தொடர்பாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தொலைக்காட்சி பேட்டியொன் றில் கூறுகையில், எமது கொள்கை தோல்வியுற்றுள்ளது. ஓர் அரசாங்கம் என்ற வகையில் நாம் எமது முந்தைய நடைமுறையை பின்பற்றத் தீர்மானித்துள்ளோம் என்றார்.

# மூன்று புதிய நெல் இனங்கள்

(கொழும்பு)

அம்பலாந்தோட்டை நெல் ஆராய்ச்சி நிலையம் மூன்று புதிய வகை நெல் இனங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. வெள்ளைச் சம்பா, சிவப்புச் சம்பா மற்றும் சிவப்பு பாஸ்மாத்தி ஆகிய நெல் வகைகளே அறிமுகப்படுத்தப்பட்டவையாகும். இந்த புதிய வகை நெல் இனங்கள் கிருமி தாக்கத்திற்கும், அதிக அளவிலான மழை வீழ்ச்சியையும் தாங்கி வளரக் கூடிய தன்மையைக் கொண்டவை என ஆராய்ச்சிகள் மூலம் வெளிப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பயங்கரவாதிகளின் தேவைகளுக்காக அப்பாவி மாணவர்கள் பயன்படுகின்றனர்

## அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மீது குற்றச்சாட்டு

அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம், பயங்கரவாதிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, பல்கலைக் கழக மாணவர்களை பயன்படுத்துவதாக பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது. பல்கலைக் கழக ஆணைக்குழுவின் தலைவர் காமினி சமரநாயக்க கண்டியில் நேற்றுமுன்தினம் இடம பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பொன்றில் இவ்வாறு குறிப்பிட்டார்.

பல்கலைக் கழகத்தின் சட்ட திட்டங்களைப் பாதுகாப்பது நாட்டின் தேசிய பாதுகாப்பினை பாதுகாப்பது போன்ற பாரிய பொறுப்பை போன்றது என அவர் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே, சிறி ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் தற்போதைய நிலைகுறித்து ஊடகவியலாளர்களுக்கு விளக்கம் ஒன்றை அவர் வழங்கினார். பல்கலை மாணியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் சிலரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

# இரத்மலானையில் புதிய குடிவரவு அலுவலகம்

(கொழும்பு)

இரத்மலானை விமான நிலையத்தில் அண்மையில் அமைக்கப்பட்ட குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் கிளை அலுவலகம் கடந்த சில மாதங்களாக மிகவும் சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பித்துள்ளது.

இரத்மலானை விமான நிலையத்தில், ஸ்தாபிக்கப்பட்ட புதிய குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கிளை பிரிவின் ஊடாக 1 கோடி ரூபா நிதியினை குறுகிய காலத்தில் வருமானமாக பெற்றுள்ளதாக திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார். இந்தப் பிரிவு கடந்த நவம்பர் மாதம் 11ஆம் திகதி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் குடாவில் தற்போது இடம்பெற்று வரும் எண்ணெய் அகழ்வு பணிகளுக்காக இலங்கை வந்துள்ள சுமார் 2 ஆயிரம் வெளிநாட்டவர்களிடம் இருந்தே இந்த வருவாயை பெற்றதாக அவர் தெரிவித்துள்ளார். இரத்மலானை விமான நிலையத்தில் உள்ள குடிவரவு திணைக்களத்தின் சேவைகளைப் பெறும் இந்த வெளிநாட்டவர்கள், மன்னார் குடாக் கடலில் நங்கூரமிட்டுள்ள 'சிக்கு' என்ற கப்பலுக்கு பெல் 412 ரக உலங்குவானூர்தி மூலம அனுப்பிவைக்கப்படுவது வழமையாகி வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

# டெங்கு நோய் தீவிரமடைகிறது; கடந்த வருடம் 182 பேர் பலி

(கொழும்பு)

டெங்கு நோய் காரணமாக கடந்த வருடத்தில் மட்டும் 182 பேர் மரணமடைந்துள்ளதாகவும், சுமார் நாலாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து 2012 ஆம் ஆண்டில் டெங்கு தொற்றை கட்டுப்படுத்துவதற்காக தேசிய மட்டத்தில் பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. கடந்த வார புள்ளி விபரங்களின் படி 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் டெங்கு தொற்றினால் பாதிப்படைந்தமை தெரியவந்துள்ளதாக சுகாதார அமைச்சின் டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் அஜித் பட்டுவன்துடாவ குறிப்பிட்டுள்ளார்.


கடந்த 2010 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த தொகை 50 சதவீத அதிகரிப்பு எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த நிலையில், எதிர்வரும் மாதங்களில், இந்த திட்டத்தை நாடளாவிய ரீதியா மேற்கொள்ள ஆலோசிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதன் முதல் கட்டமாக எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத் தப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களிலேயே டெங்கு தொற்று அதிகம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, ஆரோக்கியமான சமூகம் ஒன்றை உருவாக்குக்குவதற்கு பாடசாலை மாணவர்களை டெங்கு ஒழிப்பு தொடர்பான அறிவூட்டல் அவரகளுக்கு வழங்கப்பட வேண்டும் என கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். இந்த திட்டம், இந்த வருடத்தில் உரிய முறையில் நாடளாவிய ரீதியாக மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் தெரிவிததார்.


தரப்பட்ட நான்கு படங்களுள் வித்தியாசமான படத்தின் கீழக் கோடிடுக.

49)




(1) (2) (3) (4)

50)



(1) (2) (3) (4)

51)



(1) (2) (3) (4)

**பின்வரும் வசனங்களைக் குறிக்கும் தனிச் சொல்லைத் தருக.**

52) கடலும் வானும் சேர்ந்தாற் போல் தெரியும் பகுதி.
1) செவ்வானம் 2) தொடுவானம் 3) மேல்வானம்

53) ஒருவர் தம்மைப் பற்றித் தாமே எழுதும் வரலாறு,
1) முன்னுரை 2) சுயசரிதை 3) நன்றியுரை

54) நூறாவது ஆண்டிலே எடுக்கப்படும் விழா,
1) பொன்விழா 2) வைரவிழா 3) நூற்றாண்டு விழா

55) மனைவியை இழந்தவன்,
1) விதவை 2) தபுதாரன் 3) செல்வந்தன்

56) 'எனது பூந்தோட்டம்' என்ற தலைப்பில் ஆறு வாக்கியங்கள் சரியான எழுவாய், பயனிலைகளுடன் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்)

### கடந்த வெள்ளிக்கிழமை வெளியான வெளியீடு - 12 கேள்விகளின் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01. 1 | 14. 1. cm | 23. 14 | 35. 3 |
| 02. 2 | 2. L | 24. ஞாயிறு | 36. 2 |
| 03. 17 | 3. ml | 25. திங்கள், | 37. 4 |
| 04. 20 | 4. mm | செவ்வாய், | 38. 1 |
| 05. 1 | 5. g | வியாழன் | 39. 4 |
| 06. 1 | 15. 60 | 26. 144/- | 40. 4 |
| 07. X | 16. கடிகாரத்தில் குறித்துக | 27. 92/- | 41. திடமும், சுகமும் |
| 08. √ | காட்டுக. | 28. 8 | உள்ளவர் |
| 09. √ | 17. 400803, 400805 | 29. 3 | 42. நித்தமும்/ ஒவ்வொரு |
| 10. √ | 18. அழகு | 30. 2 | நாளும் |
| 11. 1. 30cm | 19. கிலி | 31. 4 | 43. சுத்தம் |
| 2. 54cm | 20. பழகு | 32. 1 | 44. கொண்டார் |
| 12. 16 km 100 m | 21. 525/- | 33. 3 | 45. பொருத்தமான |
| 13. 20 m | 22. 254/- | 34. 4 | விடைக்குப் புள்ளியிடுக. |



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - II
1 மணி 15 நிமிட


## கல்வி முரசு

வெளியீடு 13



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**சகல வினாக்களுக்கும் விடையளிக்க.**



1 2 3 4

மேலுள்ள உருக்கள் குறிப்பது வீதிவிதிகள் சிலவாகும். அதற்கமைய கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

01) பாடசாலைக்கு அருகில் பெருவீதியில் காணக்கூடியது, இதில் எத்தனையாவது உரு ஆகும்?

..........................................................................

02) நீர் பாடசாலைக்குச் செல்வது சைக்கிளில் எனில், வீதியின் எப்பக்கமாகச் செல்வீர்?

..........................................................................

03) முதல் உருவில் குறியீட்டினால் குறிக்கப்பட்டுள்ள பிரசித்தமான சர்வதேச அமைப்பு யாது?

..........................................................................

04) இரண்டாவது உரு எதனைக் காட்டுகின்றது?

..........................................................................

05) அதனை ஆங்கிலத்தில் எழுதுக.

..........................................................................

06) வாகனத்தைச் செலுத்தும் ஒரு சாரதியிடம் முக்கியமாக இருக்க வேண்டிய பத்திரம் யாது?

..........................................................................

07) நான்காவது உரு எதனைக் காட்டுகின்றது?

..........................................................................

**பின்வரும் துண்டுப் பிரசுரத்தை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.**

> நாகொடை இந்துக் கல்லூரியைச் சேர்ந்த 5ஆம்
> ஆண்டு மாணவர்கள் வழங்கும்
> **"கலைநிகழ்ச்சி"**
> காலம் - 2012 தை 24ஆம் திகதி பி.ப.2 மணி
> இடம் - கல்லூரி பிரதான மண்டபம்
> ரிக்கட் - 50/-, 25/-, 10/-
> (பாடசாலை மாணவர்களுக்கு மட்டும் 10/-)
> மண்டப வாயிலிலும், ஸ்ரார் புத்தகசாலையிலும்
> ரிக்கற்றுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்

08) இக்கலை நிகழ்ச்சியை எங்கு கண்டு களிக்கலாம்?

..........................................................................

09) அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இரண்டு இடங்களைக் குறிப்பிடுக.
1) .................................................. 2)..................................................

10) கலைநிகழ்ச்சி எப்போது நடைபெறவுள்ளது?
..................................................

11) கலை நிகழ்ச்சிக்காக திருமதி பாலகுமார் நான்கு ஐம்பது ரூபா ரிக்கற்றுக்களையும், மூன்று பத்து ரூபா ரிக்கற்றுக்களையும் வாங்கினார். அவர் செலுத்திய பணம் எவ்வளவு?
..................................................

12) நாகொடை இந்துக் கல்லூரி கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ளது. அக்கல்லூரி எந்த மாகாணத்தைச் சேர்ந்தது?
..................................................

13) இக்கலை நிகழ்ச்சியை பா.அ.ச.ஒழுங்கு செய்தது. பா.அ.ச. என்ற சுருக்கக் 'குறிப்புகளை விரித்து எழுதுக.
..................................................

14) இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் இருந்து 150 மாணவிகள் கலை நிகழ்ச்சியைப் பார்க்க வந்தனர். அவர்கள் செலுத்திய பணம் எவ்வளவு?
..................................................

15) கல்லூரி என்பதை ஆங்கிலத்தில் எழுதுக.
..................................................

16) இக்கல்லூரி எந்த சமயப் பிரிவில் அடங்கும் என நீர் கருதுகிறீர்?
..................................................

17) "வாயிலிலும்" என்ற சொல்லின் பன்மைச் சொல்லினை எழுதுக.
..................................................

18) கலை நிகழ்ச்சியில் பயன்படுத்தப்படுகின்ற இசைக் கருவி ஒன்றின் பெயர் தருக.
..................................................

19) அது எவ்வகைக் கருவியைச் சேர்ந்தது?
..................................................

**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

20) மாகாணக் கல்வி நிர்வாகத்திற்குப் பொறுப்பான அதிகாரி எவ்வாறு அழைக்கப்படுவார்?
1. கோட்டக்கல்விப் பணிப்பாளர் 2. மாகாணக் கல்விப் பணிப்பாளர்
3. வலயக் கல்விப் பணிப்பாளர்


**பின்வரும் வாக்கியத்தில் நான்கு சொற்கள் எழுத்துப் பிழையாக உள்ளன. அச்சொற்கள் எவையெனக் கண்டு அவற்றைச் சரியாக எழுதுக.**

21) எமது கல்லூரி அதிபர் தலைமையில் புதிய முதலாம் தரமானவர்கள் இறண்டாம் தரமாணவர்களால் வரவேற்க்பட்ட சம்பவம் 8.1.99 ஆம் திகதி நரைபெற்றது.

22) நெல், வேம்பு, பனை, தென்னை, பலா, இலுப்பை, வாழை, பப்பாசி, கமுகு, அரசு என்னும் தாவரங்களை ஆணிவேர் உள்ள தாவரங்கள், நாருருவேர் உள்ள தாவரங்கள் என வகைப்படுத்தி பின்வரும் அட்டவணையில் எழுதுக.

| ஆணிவேர் | நாருரு வேர் |
|---|---|
| | |

**கீழ்வரும் உருவை அவதானிக்கவும்.**



23) படத்தில் காட்டப்பட்டுள்ள திண்மத்தின் பெயர் யாது?
..................................................

24) இத்திண்மத்திற்கு எத்தனை விளிம்புகள் உண்டு?
..................................................

25) இத்திண்மத்திற்கு எத்தனை உச்சிகள் உண்டு?
..................................................

26) இத்திண்மத்தின் ஒரு முகத்தின் நீளம் 7 cm , 3cm அகலம் எனின், அதனை உருவில் குறித்துக் காட்டுக.
..................................................

27) இத்திண்மத்தின் நிறை 1 kg 440 g எனின், அதை 6 சம பகுதிகளாக வெட்டினால் ஒரு பகுதியின் நிறை யாது?
..................................................

28) இத்திண்மத்தின் ஒவ்வொரு முகத்திலும் பின்வரும் நிறங்கள் பூசப்பட்டன. அந்நிறங்களை ஆங்கிலத்தில் எழுதுக.
1. சிவப்பு .................................... 2. பச்சை ....................................
3. நீலம் .................................... 4. மஞ்சள் ....................................

29) கிராமசேவகர் ஒருவர் ஆற்றும் இரண்டு சேவைகளைப் பின்வருவனவற்றில் இருந்து தெரிவு செய்து எழுதுக.
- ♦ விவசாயக் கடன் வழங்குதல்
- ♦ அடையாள அட்டையைப் பெற்றுக்கொடுத்தல்
- ♦ வயோதிபர் இல்லத்திற்குப் பொறுப்பாக இருத்தல்
- ♦ உணவுப் பங்கீட்டு அட்டை வழங்குதல்
- ♦ நோயாளிகளுக்கு நிவாரணம் வழங்குதல்

**பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடையை அடைப்புக்குள் இருந்து தெரிந்து எதிரேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**
**(மகா இலுப்பலம, இந்தியா, மகாவலி கங்கை, வைரவிழா, வெண்புறா)**

30) சமாதானச் சின்னமாகக் கருதப்படுகின்ற பறவை எது?..............................
31) இலங்கைக்கு மிக அண்மையில் உள்ள நாடு எது?..............................
32) இலங்கையின் மிக நீளமான நதி எது?..............................
33) 60 ஆவது ஆண்டு நிறைவு விழா?..............................
34) நெல் ஆராய்ச்சி நிலையம் உள்ள இடம்?..............................
35) இரக்கம், இறக்கம் ஆகிய சொற்களை வைத்து பொருள் விளங்க வசனம் அமைத்து எழுதுக.

**பின்வரும் ஒவ்வொரு வாக்கியமும் சரியாயின் (சரி) எனவும், பிழையாயின் (பிழை) எனவும் எதிரேயுள்ள அடைப்புக் குறிக்குள் எழுதுக.**


36) புல்லாங்குழல் ஓர் இசைக்கருவி அல்ல. ( )
37) தினகரன் என்பது ஒரு பத்திரிகை ஆகும். ( )
38) காற்று வீசும் திசையைக் காட்டுவது காற்றுவேகமானி. ( )
39) கனவுரு ஒன்றின் எல்லா முகங்களும் சதுரவடிவமானவை ( )

**40 முதல் 48 வரையுள்ள வினாக்கள் தொடர்பாக பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தாவரங்கள் எந்த வகையைச் சார்ந்தன என்பதை உரிய கூட்டிலே அடையாளத்தை இட்டுக் குறிப்பிடுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 40) வெண்டி | .............. | .............. | .............. | .............. | .............. |
| 41) மா | .............. | .............. | .............. | .............. | .............. |
| 42) அறுகு | .............. | .............. | .............. | .............. | .............. |
| 43) குப்பைமேனி | .............. | .............. | .............. | .............. | .............. |
| 44) தென்னை | .............. | .............. | .............. | .............. | .............. |
| 45) பாகல் | .............. | .............. | .............. | .............. | .............. |
| 46) கோரை | .............. | .............. | .............. | .............. | .............. |
| 47) தேயிலை | .............. | .............. | .............. | .............. | .............. |
| 48) புடோல் | .............. | .............. | .............. | .............. | .............. |


விசேட வினாத்தாள் II - தரம் 05 - 2012 - கல்விமுரசு

# தீய ஆவிகளை விரட்டுவதற்கு -விசேட பூஜைக்கு ஏற்பாடு-



(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட்டின் புதிய தலைவராகப் பதவியேற்றுள்ள உபாலி தர்மதாஸ, தீய ஆவிகளை விரட்டுவதற்காக விசேட பூஜையொன்றை ஏற்பாடுசெய்துள ளார்.

இலங்கை அணி கடந்த வருடம் ஒரு டெஸ்ட் போட்டியில் மாத்திரம் வெற்றி பெற்றிருந்தது. வீரர்களுக்கு ஏப்ரல் முதல டிசெம்பர் வரை சம்பளம் வழங்கப்படவும் முடியாத நெருக்கடியை இலங்கை கிரிக்கெட் சபை எதிர்நோக்கியது. இவ்வாறான பின்னணியிலேயே இப்பூஜையை நடத்த அவர் ஏற்பாடு செய்தார்.

நான் ஒரு வர்த்தகர். இத்தகைய தீய ஆவிகளின் தாக்கம் எனக்கு நன்றாகத் தெரியும் என எக்ஸ்பிரஸ் ட்ரிபியூனிடம் தர்மதாஸ தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கை கிரிக்கெட் சபையின் நிதி நெருக்கடி குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், இது வெறும் பணச்சுழற்சி பிரச்சினைதான் என்றார்.

இலங்கை கிரிக்கெட் சபை 7 மில்லியன் ரூபா கடனில் இருப்பதாக செய்திகள் வெளியாகின. எனினும் ஜூலை மாதம் இந்திய அணியுடனான போட்டிகளை நடத்தும்போது 15 மில்லியன் டொலர் கிடைக்கும் என உபாலி தர்மதாஸ நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சேவை வழங்குநர்கள் அனைவருக்கும் அவர்களுக்கான கொடுப்பனவுகள் காலக்கிரமத்தில் வழங்கப்படும் என தான் உறுதியளித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மீண்டும் விளையாட முடியும்

அவுஸ்ரேலிய பகிரங்க ரென்னிஸ் தொடரில் உபாதையில் இருந்து மீண்டு, விளையாட முடியும் என பெல்ஜியத்தின் முன்னணி வீராங்கனை கிம் கிளிஜ்ஸ் டர்ஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு மெல்பேர்ன் பார்க்கில் நடைபெற்ற அவுஸ்ரேலிய பகிரங்க ரெனனிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் சீனாவின் லீ னா வை வெற்றிகொண்டு சம்பியன் பட்டதை வென்றெடுத்தார்.

இந்த நிலையில் பிரிஸ்பேர்ன் இன்டர்நேஷனல் ரென்னிஸ் தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் காயம் காரணமாக போட்டியின் இடையில் கிளிஜ்ஸ்டர்ஸ் விலகியிருந்தார்.

இடுப்புப் பகுதியில் ஏற்பட்டுள்ள



உபாதையில் இருந்து அவுஸ்ரேலிய பகிரங்க ரென்னிஸ் தொடருக்கு முன்னர் தேர்ச்சி பெற முடியும் என அவர் கூறியுள ளார்.

அடுத்த சில நாட்களுக்கு கிளிஜ்ஸ்டர்ஸ் தீவிர சிகிச்சையை பெற வேண்டுமெனவும், நாளைமறுதினம் அவர் இரண்டாவது பரிசோதனை செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிரான்ஸ்லாம் ரென்னிஸ் தொடர்களில் நான்கு தடவைகள் கிம் கிளிஜ்ஸ்டர்ஸ் சம்பியன் பட்டத்தினை வென்றெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அனில் கும்ளே மீது மனைவியின் முதல் கணவர் வழக்கு

(சென்னை)



ஓய்வுபெற்ற சுழற்பந்து வீச்சாளரும், இந்தியக் கிரிக்கெட்டின் முனனாள் அணித் தலைவருமான அனில் கும்ளே மீது மோசடி வழக்கொன்றை அவரது மனைவியின் முன்னாள் கணவர் ஜாகிர்தார் தாக்கல் செய்துள்ளார்.

அனில் கும்ளேயின் மனைவி சேத்னாவுக்கு அவருடைய முதல் கணவர் ஜாகிர்தார் என்பவர் மூலமாக ஆருன்னி என்ற 12 வயது பெண் குழந்தை உள்ளது. இச்சிறுமி தற்போது தனது தாயுடன் வசித்து வருகிறார்.

ஆருன்னிக்குக் கடவுச்சீட்டு பெற முயன்ற அனில்கும்ளே, விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்கையில், ஆருன்னியின் தந்தை என்று ஜாகிர்தார் பெயரைக் குறிப்பிட்டாலும், தந்தையின் கையொப்பமாக தனது கையொப்பத்தை இட்டுள்ளார்.

இதையறிந்த ஜாகிர்தார், அனில் கும்ளேயின் இச்செயல் மோசடியானது என்று கூறி பெங்களூர்-பாரதி நகர் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள் ளார். ஒருவாரமாகியும், தனது முறையீட்டின் பேரில் பொலிஸார் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தற்போது கர்நாடக மாநில உயர் நீதிமன்றத்தை அணுகியுள்ளார்.

அவரது மனுவில் அனில்கும்ளே மோசடி செய்துள்ளதாகவும், கிரிமினல் குற்றத்தின் கீழ் அவரைக் கைது செய்ய வேண்டும் என்றும் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.





கடந்த வருடம் பாகிஸ்தான் அணி வெற்றியீட்டிய சுற்றுப்போட்டிகளின் சம்பியன் கிண்ணங்களுடன் வீரர்கள் மற்றும் அதிகாரிகள் காணப்படும் புகைப்படங்களை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கு விஜயம் செய்ய சர்வதேச கிரிக்கெட் அணிகள் மறுத்து வருகின்றன. எனினும் கடந்த வருடம் பாகிஸ்தான் அணி விளையாடிய டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர்களில் உலகக்கிண்ணத் தொடரில் மாத்திரமே அவ்வணி தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இருதரப்பு ஒருநாள் சுற்றுப்போட்டிகளில் நியூஸிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், அயர்லாந்து, ஸிம்பாப்வே, இலங்கை, பங்களாதேஷ் அணிகளை பாகிஸ்தான் தோற்கடித்தது.

டெஸ்ட் போட்டிகளில் நியூஸிலாந்து, ஸிம்பாப்வே, இலங்கை, பங்களாதேஷ் அணிகளை பாகிஸ்தான் தோற்கடித்தது. மேற்கிந்திய அணியுடனான டெஸ்ட் தொடரை வெற்றி தோல்வியின்றி நிறைவுசெய்தமை குறிப்பிடத்தக்கது.

# டேர்பன் வெற்றியை அழிக்க முடியாது-டில்ஷான்
# சிறந்த பந்துவீச்சே வெற்றிக்குக் காரணம்-ஸ்மித்

தமது அணி தொடர்பான விமர்சனங்களுக்கு மத்தியில் டேர்பனில் இடம்பெற்ற டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் வெற்றிபெற்றமை அழிக்க முடியாத ஒன்றென இலங்கை கிரிக்கெட் அணித் தலைவர் டி.எம்.டில்ஷான் தெரிவித்துள்ளார்.

முரளி ஓய்வுபெற்ற பின்னர் இலங்கைக்கு வெளியே இலங்கை அணியால் டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற முடியாது என அனைவரும் எண்ணியிருந்தாக அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் தமது அணியால் அதனை செய்ய முடியும் என அனைவராலும் தற்போது புரிந்து கொள்ள முடியும்.

எனினும் மூன்று போட்டிகளை கொண்ட இந்தத் தொடரில் இரண்டுக்கு ஒன்று என்ற ஆட்டக்கணக்கில் இலங்கை அணி தொடரை இழந்திருந்தது.

இதேவேளை இறுதி டெஸ்ட் போட்டியில் ஓரணியாக இணைந்து சிறந்த முறை



யில் பந்து வீசியமையே போட்டியில் வெற்றி பெறக் காரணம் என தென்னாபிரிக்க அணித் தலைவர் கூறியுள்ளார்.

அனைத்து பந்துவீச்சாளர்களும் சிறப்பான முறையில் செயற்பட்டதன் காரணமாக இலங்கை அணிக்கு அழுத்தம் கொடுக்க முடிந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்மூலம் 2008 ஆம் ஆண்டிற்கு பின்னர் சொந்த மண்ணில் வைத்து டெஸ்ட் கிரிக்கெட் தொடரை தென்னாபிரிக்க அணி கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பயிற்சியில் கவனம் செலுத்தாததே தோல்விக்கான முக்கிய காரணம்
## கவாஸ்கர் கூறுகிறார்

அவுஸ்ரேலியாவில் இந்திய வீரர்கள் போதுமான அளவு பயிற்சிகள் மேற்கொள்ளவில்லை. இதனாலேயே முதல் 2 டெஸ்ட் போட்டியிலும் இந்திய அணி படுதோல்வியை சந்தித்துள்ளது என கவாஸ்கர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்

முதல் டெஸ்ட் போட்டி 4 நாட்களில் முடிந்தது. அதன்பிறகு கூட இந்திய வீரர்கள் பயிற்சியில் கவனம் செலுத்தவில்லை. மாறாக வெளியில் ஊர் சுற்றுவதிலேயே கவனம் செலுத்தியுள்ளனர். என்ன நினைப்பில்தான் வீரர்கள் உள்ளனர் என்பது தெரியவில்லை.

அதிகளவிலான ஒருநாள் போட்டிகளில் இந்திய அணி பங்கேற்கிறது. அதுவும் பந்துகள் எழும்பாத மைதானத்தில் தான் நடக்கிறது. அப்படி ஆடிவிட்டு அவுஸ்ரேலிய ஆடுகளத்திற்கு தகுந்தவாறு உடனே துடுப்பாட்டத்தில் மாற்றம் செய்வது வீரர்களுக்கு சிரமம்தான்.

பிரவீன்குமார் உடல்தகுதியுடன் இருந்தால் அவரை விரைவில் அவுஸ்ரேலியாவுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கையை இந்திய கிரிக்கட் சபை எடுக்க வேண்டும்.

அவரது ஸ்விங் பந்துவீச்சு அவுஸ்ரேலிய ஆடுகளங்களில் நன்கு எடுபடும். சச்சினின் 100 ஆவது சதம் குறித்து ஊடகங்கள் அதிகம் பேசுவதை நிறுத்தி கொள்ள வேண்டும். இதனால் அவருக்கு கூடுதல் நெருக்கடிதான் ஏற்படுகிறது எனத் தெரிவித்தார்.

## கனேபி சம்பியன்



பிரிஸ்பேனில் நடைபெற்ற சர்வதேச ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் எஸ்தோனியாவின் கையா கனேபி சம்பியன் பட்டம் வென்றார்.

இப்போட்டியின் இறுதிச்சுற்றில் எஸ்தோனியாவின் கனேபி, சுலோவேகியாவின் ஹன்டுசோவாவைச் சந்தித்தார். அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய கனேபி 6-2, 6-1 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார்.

பெண்கள் இரட்டையர் பிரிவில் செக் குடியரசின் ஆன்ட்ரியா, லூசியா ஜோடி, ஜேர்மனியின் ஜூலியா ஜார்ஜஸ், இத்தாலியின் பெனிட்டா ஜோடியை 6-2, 10-7 என்ற நேர் செட் கணக்கில் வீழ்த்தி கிண்ணத்தை வென்றது.

# விளம்பரத்துக்கு 5 கோடி

(சிட்னி)

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி கப்டன் மைக்கேல் கிளார்க்கின் துடுப்பு மட்டையில் விளம்பரம் செய்ய ரூபா 5 கோடியே 30 இலட்சம் அளிக்க ஸ்பார்டன் ஸ்போர்ட்ஸ் நிறுவனம் முன்வந்துள்ளது.

இந்தியாவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் முச்சதம் அடித்ததன் மூலம் இந்த அளவு அதிகமான தொகைக்கு அவர் ஒப்பந்தமாக உள்ளார். அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு ஸ்பார்டன் ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் சின்னம் பொறித்த துடுப்புமட்டை வைத்து விளையாடுவார்.

அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த இந்த நிறுவனம் விளையாட்டு உபகரணங்கள் தயாரிப்பில் முன்னிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இலங்கையிலுள்ள மீனவர்களை மீட்கக்கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் வேலைநிறுத்தம்


(மண்டபம்)

மீனவர்கள் 5 பேரை விடுவிக்க வலியுறுத்தி, ராமேஸ்வரம் மீன வர்கள் நேற்று முன்தினம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

ராமேஸ்வரம் தங்கச்சி மடத்தை சேர்ந்த கிளாடுவின் விசைப்படகில் மீனவர்கள் அகஸ்டஸ், எமர்சன், வில்சன், லாங்லெத், பிரசாத் ஆகியோர் கடந்த நவம்பர் 28 ஆம் திகதி மீன் பிடிக்க கடலுக்குச் சென்றனர். அன்றிரவு கச்சத்தீவு அருகே அவர்களை படகுடன் இலங்கை கடற்படையினர் சிறைப் பிடித்துச் சென்றனர்.

போதைப்பொருள் கடத்திய தாக 5 பேர் மீதும் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து, யாழ்ப் பாணத்திலுள்ள மல்லாகம் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

பின்னர் 5 மீனவர்களும் யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டனர். மீனவர்களை விடுவிக்க வலியுறுத்தி ராமேஸ்வரம் மீனவர்கள் தொடர் உண்ணா விரதம், சாலை மறியல் போராட்டம் மேற்கொண்டனர். ஆனாலும் மீனவர்கள் விடுவிக்கப்படவில்லை. இப் பிரச்சினை தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங், மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் ஆகியோரிடம் மீனவர் நலச்சங்கம் சார்பில் மனு கொடுக்கப்பட்டது.



இந்நிலையில், சிறையில் அடைக்கப்பட்டுள்ள 5 பேருக்கும் வரும் 16 ஆம் திகதி வரை காவலை நீடிக்க நீதிபதி உத்தர விட்டார். இதையடுத்து, அவர்களை விரைவில் விடுவிக்க வேண்டும். இந்திய கடல் பகுதிகளுக்கு நுழையும் இலங்கை மீனவர்களை இந்திய கடலோரக் காவல் படை கைது செய்யக் கூடாது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால் 700 க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கரையில் நிறுத்தப்பட்டிருந்தன.

# முல்லைப்பெரியாறு அணை விவகாரம் கேரள அரசை கண்டித்து உண்ணாவிரதம்

(கோவை)

முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையில் கேரள அரசின் நடவடிக்கைகளை கண்டித்து, கோவை மத்திய சிறை கைதிகள் 800 பேர் நேற்றுமுன் தினம் உண்ணாவிரதம் இருந்தனர். கோவை மத்திய சிறையில் தண்டனை மற்றும் விசாரணைக் கைதிகள் என மொத்தம் 1,846 பேர் உள்ளனர். இவர்களில் தண்டனைக் கைதிகள் மட்டும் 1,050 பேர் உள்ளனர். தமிழகம், கேரள மாநிலங்களுக்கு இடையே ஏற்பட்டுள்ள முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையில், புதிய அணை கட்டியே தீருவோம் என பிடிவாதமாக உள்ள கேரள அரசின் நிலைப்பாட்டை கண்டித்தும், இந்த பிரச்சினையில் கேரள அரசு, தமிழக மக்களுக்கு விரோதமாக எடுத்து வரும் நடவடிக்கைகளை எதிர்த்தும் சிறைக் கைதிகள் 800 பேர் நேற்று முன்தினம் ஒரு நாள் அடையாள உண்ணா விரதம் இருந்தனர். நேற்று முன்தினம் காலை மற்றும் மதிய உணவை கைதிகள் யாரும் சாப்பிடவில்லை. அவர்கள் அடைக்கப்பட்டுள்ள தனித்தனி கூண்டுகளில் அமர்ந்து உண்ணா விரதம் இருந்தனர்.

## இந்தியச் செய்திகள்




தமிழகத்தில் ஜல்லிக்கட்டிற்கு, எதிர்ப்பு தெரிவித்து சென்னை பெசன்ட்நகர் எலியட்ஸ் கடற்கரைப்பகுதியில் பீட்டா அமைப்பினர் முகமூடி அணிந்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

# பாகிஸ்தான் சிறையில் உள்ள 359 இந்தியர்கள் விடுதலை

(புதுடில்லி)

சிறைகளில் உள்ள 180 இந்தியர்கள், 179 மீனவர்கள், அப்பாவி மக்களை விடுவிக்க பாகிஸ்தான முடிவு செய்துள்ளது. நல்லெண்ண அடிப்படையிலும் புத்தாண்டுப் பரிசாகவும் இந்த முடிவு எடுக்கப் பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடல் எல்லை தாண்டிய இந்திய மீனவர்கள், தெரியாமல் எல்லை தாண்டிய பொதுமக்கள், சந்தேகத்தின் அடிப்படையில் எல்லையில் கைது செய்யப்பட்ட இந்தியர்கள் நூற்றுக்கணக்கில் பாகிஸ்தான் சிறைகளில் அடைக்கப் பட்டுள்ளனர். அதேபோல் இந்திய சிறைகளிலும் பாகிஸ்தானி யர்கள் நூற்றுக் கணக்கில் உள்ளனர். அவர்களை விடுவிக்க இரு நாடுகளும் தொடர்ந்து பேச்சு நடத்தி அவ்வப்போது சிலர் விடுவிக்கப் பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், இருநாட்டு உறவை பலப்படுத்தவும், நம்பிக் கையை ஏற்படுத்தவும், புத்தாண்டு பரிசாகவும் 180 இந்தியர்கள், 179 மீனவர்கள், பொதுமக்களை விடுவிக்க பாகிஸ்தான் அரசு முன்வந்துள்ளது. இவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் விடுவிக்கப் பட்டனர். அதன்பின், எல்லோரும் கராச்சியில் இருந்து லாகூருக்கு அழைத்து வரப்பட்டு அங்கிருந்து வாகா எல்லை வழியாக நேற்று இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப் பட்டு அதன்பின் அவரவர் சொந்த மாநிலங்களுக்கு அவர்கள் அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று சிந்து மாகாண அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# எம்.ஜி.ஆர் திரைப்பட படப்பிடிப்பு தளத்தை ஜெயலலிதா திறந்துவைப்பு

(சென்னை)

சென்னை தரமணியில் உள்ள எம்.ஜி.ஆர். திரைப்பட பயிற்சி நிறுவனத்தில் புதுப்பிக்கப்பட்ட படப்பிடிப்பு தளத்தை முதல்வர் ஜெயலலிதா திறந்து வைத்தார். இந்தத் தளம் ரூ.1.43 கோடியில் குளிர்சாதன வசதியுடன் புதுப் பிக்கப்பட்டுள்ளது. இந்தப் படப் பிடிப்புத் தளம் சுமார் 120 அடி நீளமும் 60 அடி அகலமும் கொண்டது. இந்தத் தளம் 2 சிறிய படப்பிடிப்பு கூடங்கள் கொண்டது. இந்தப் படப்பிடிப்பு தளம் சிறந்த ஒலி மற்றும் ஒளிப் பதிவு செய்யும் வகையில் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. மூன்று ஆடை மாற்றும் அறைகள், தையல் கூடம் மற்றும வாகன நிறுத்தம் ஆகியவற்றையும் உள்ளடக்கியது.



முதல்வர் ஜெயலலிதாவால் செயல்படுத்தப்படும் மக்கள் நல சிறப்புத் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய நிகழ்வுகள் குறித்த புகைப்படத் தொகுப்புகள் தலைமைச் செயலகத்தின் பிரதான கட்டடத்தின் 6-வது நுழைவு வாயிலில் ஒரு மாடமாக உருவாக்கப்பட்டுள்ளது. ரூ.14 இலட்சம் செலவில் அமைக்கப் பட்டுள்ள இந்த மாடத்தையும் முதல்வர் கடந்த வெள்ளிக் கிழமை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலர் தேவேந்திரநாத் சாரங்கி, செய்தித்துறை அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜி, துறையின் இயக்குநர் சங்கர், செயலாளர் ராஜாராம் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

# கொசுக்கடியில் தவித்தார் — மன்சூர் அலிகான் —

(சென்னை)



அரும்பாக்கம் திருக்குமரபுரம் 2-வது தெருவில் உள்ள அரை கிரவுண்டு நிலத்தை நடிகர் மன்சூர் அலிகான் அபகரித்து அதில் 16 வீடுகள் கட்டி வாட கைக்கு விட்டுள்ளதாக ரியல் எஸ்டேட் அதிபர் துரைவேலு பொலிஸில் புகார் கொடுத்திருந்தார்.

94 ஆம் ஆண்டு ரூ.2.60 இலட்சத்திற்கு வாங்கிய அந்த இடத்தை நடிகர் மன்சூர் அலிகான் செல்வாக்கை பயன்படுத்தி நில அபகரிப்பு செய்துள்ளதால் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி இருந்தார். இதன் பேரில் மத்திய குற்றப பிரிவு பொலிஸார் நேற்று முன்தினம் அரும்பாக்கம் சென்று நடிகர் மன்சூர் அலிகானை கைது செய்தனர். அப்போது அவர் குளிக்க எண்ணை தேய்த்து கொண்டிருந்தார். பொலிஸாரை பார்த்ததும் வெயிட் பண்ணுங்க குளித்து விட்டு வருகிறேன் என்றார். ஆனால் பொலிஸார் அதற்க் அனுமதிக்கவில்லை. பிறகு குளிக்கலாம் முதலில் சட்டையை போட்டு வாங்க என்று கூறினர்.

இதனால் எண்ணை வடியும் உடலுடன் மன்சூர் அலிகான் பொலிஸ் நிலையத்துக்கு வந்தார். அங்கு விசாரணை நடத்திய பொலீஸார் அவரது கைரேகையை பதிவு செய்து கொலை மிரட்டல் உள்பட 6 பிரிவுகளின் கீழ் வழக் குப்பதிவு செய்து புழல் சிறையில அடைத்தனர். சிறையில் நேற்றி ரவு கொசுக்கடியில் தூங்காமல் தவித்த மன்சூர் அலிகான் என்னைச் சிக்க வைத்துவிட்டார்களே என்று புலம்பினார்.

# இறந்த காளைக்கு அழகிய மணிமண்டபம்



(மதுரை)

வீரவிளையாட்டான ஜல்லிக் கட்டுக்கு பெயர் பெற்ற மதுரையில், ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொருவரும் காளைகள் வளர்த்தாலும், ஜாதி பேதமின்றி அனைத்து மக்களும் சேர்ந்து ஜல்லிக்கட்டுக்காக காளைகள் வளர்க்கிறார்கள். அதுவும் ஊருக்கு பெருமை சேர்த்து மறைந்த காளைக்கு மணிமண்டபம் கட்டியிருக்கிறார்கள் என்றால் ஆச்சரியம்தானே.

அலங்காநல்லூரில் இருந்து பாலமேடு வழியாக 7 கி.மீ., தூரம் பயணித்தால் வரவேற்கிறது பொந்துகம்பட்டி கிராமம். இங்குள்ள முத்தாலம்மன் கோயிலுக்கு, ஊர் சார்பில் கோயில் காளை ஒன்று கம்பீரமாக வலம் வந்தது. திடீரென்று ஐந்தாண்டுகளுக்கு முன், இறந்துபோனது. ஊரே அழுதது. எந்த ஜல்லிக்கட்டுக்கு போனாலும், பரிசு இல்லாமல் திரும்பி வராது. அப்படி நம்ம ஊருக்கு பெருமை சேர்த்த இந்த காளைக்கு கோயிலுக்கு எதிரேயே நினைவுச் சின்னம் அமைக்கவேண்டும் என ஊர் மக்கள் கூடி முடிவெடுத்தனர். சில இலட்சம் ரூபாவில், அழகிய மணிமண்டபம் உருவானது. அதில் கம்பீரமாக காளை உட்கார்ந்து ஊரை காப்பது போல் சிலை வடிவமைக்கப்பட்டது. இன்றும் பாலமேடு ஜல்லிக் கட்டு நடக்கும் தினத்தன்று, இந்த கோயில் காளைக்கு விசேஷ பூஜைகள் நடைபெறுவதாக ஊர்ப்பெரியவர் ஒருவர் தெரிவித்தார்.

# புயல் நிவாரணப் பணிக்கு கருணாநிதி நிதியுதவி

"தானே" புயல் நிவாரணப் பணிகளுக்காக தி.மு.க. அறக்கட்டளை சார்பில் ரூபா 50 இலட்சத்துக்கான காசோலையை அக்கட்சியின் தலைவர் கருணாநிதி நேற்று முன்தினம் சனிக்கிழமை வழங்கினார்.

புயலால் பாதிக்கப்பட்ட கடலூர், விழுப்புரம், திருவாரூர் மாவட்ட மற்றும் புதுச்சேரி மாநில திமுக நிர்வாகிகளிடம் இந்த நிதியை அவர் வழங்கினார்.

ஜனவரி 4 ஆம் திகதி கடலூர், விழுப்புரம், திருவாரூர் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி மாநிலத்தில் "தானே" புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை கருணாநிதி பார்வையிட்டார். அப்போது புயல் நிவாரப் பணிகளுக்கு திமுக அறக்கட்டளை சார்பில் ரூபா 50 இலட்சம் வழங்கப்படும் என அறிவித்திருந்தார்.

அதன்படி, கடலூர் மாவட்டத்துக்கு ரூ. 20 இலட்சத்துக்கான காசோலையை, மாவட்ட தி.மு.க நிர்வாகிகள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், து. தங்கராசு, பெ. கணேசன், குரு. சரஸ்வதி ஆகியோரிடமும், விழுப்புரம் மாவட்டத்துக்கு ரூபா 10 இலட்சத்துக்கான காசோலையை, மாவட்டச் செயலாளர் க. பொன் முடியிடமும், திருவாரூர் மாவட்டத் துக்கு ரூபா 10 இலட்சத்துக்கான காசோலையை, மாவட்ட நிர்வாகிகள் உ. மதிவாணன், அழகு. திருநாவுக்கரசு, அ. ராஜசேகரன், எம்எஸ். கார்த்திக், ஜோதிராமன் ஆகியோரிடமும், புதுச்சேரிக்கு ரூபா 10 இலட்சத்துக்கான காசோலையை, மாநில நிர்வாகிகள் ஆர்.வி. ஜானகிராமன், எஸ்பி. சிவகுமார், எம்ஏ.எஸ் சுப்பிரமணியன், கென்னடி, சந்திரேஷ்குமார் ஆகியோரிடமும் கருணாநிதி வழங்கினார்.

அப்போது தி.மு.க துணைப் பொதுச்செயலாளர் துரைமுருகன், அமைப்புச் செயலாளர் டி.கே.எஸ். இளங்கோவன், திருவண்ணா மலை மாவட்டச் செயலாளர் எ.வ.வேலு, சட்டத்துறைச் செயலாளர் ஆர்எஸ். பாரதி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## உலகச் செய்திகள்

# வன்முறைகள் முடிவுக்கு கொண்டுவரப்படவில்லை



(இட்லிப்)

சிரியாவில் இடம்பெற்ற மோதலில் சுமார் 27 பேர் உயிரிழந்துள்ளதாக அந் நாட்டின் எதிர்க்கட்சி கூறியுள்ளது. சிரியாவின் இட்லிப் நகரிலேயே அதிகளவிலானோர் கொல்லப்பட்டுள்ளதாக உள்நாட்டின் கூட்டுறவுக் குழு தெரிவித்துள்ளது. அரபு லீக்கின் கண்காணிப்பாளர்கள் சிரியாவிற்கு வருகைதந்ததன் பின்னர் வன்முறைகள் வலுவடைந்ததோடு உயிரிழப்புக்களும் அதிகரித்துள்ளதாக அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இதேவேளை வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பான உடன்படிக்கையை சிரியா நடைமுறைப்படுத்தவில்லை என கட்டார் பிரதமர் ஷேக் ஹமாட் குறிப்பிட்டுள்ளார். அரபு லீக் அமைப்புடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் சிரியாவில் கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை கால விரயமான ஒன்றென அவர் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியாக அனைத்து நகரங்களில் இருந்து இராணுவத்தினர் வெளியேற்றப்பட வேண்டுமென இந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் நகரங்களில் இருந்து இராணுவத்தினர் மீளப் பெறப்படவில்லை எனவும், கொலைகள் தொடர்ந்தும் இடம்பெறுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். கண்காணிப்பாளர்களின் ஆரம்ப அறிக்கை குறித்து அரபு லீக் அமைப்பின் பேரவை நேற்று கலந்துரையாடவுள்ளது எனத்தெரியவருகின்றது.

# ஈரானியர்களை மீட்ட அமெரிக்க கடற்படையினர்



கடற்கொள்ளையர்களால் பணயக் கைதிகளாக சிறைபிடிக்கப்பட்ட ஈரானியர்களை அமெரிக்க கடற்படையினர் மீட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அரேபிய கடற்பரப்பில் வைத்து சிறைபிடிக்கப்பட்ட ஈரானைச் சேர்ந்த 13 மீனவர்கள் இவ்வாறு மீட்கப்பட்டதாக பெண்டகன் குறிப்பிட்டுள்ளது. கப்பல் ஒன்றில் இருந்து விடுக்கப்பட்ட அபாய அழைப்பினை அடுத்து சுமார் ஒரு மாதத்திற்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்த குறித்த ஈரானியர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

கடற்கொள்ளையர்கள் என சந்தேகிக்கப்படும் 15 பேரை அமெரிக்க கடற்படையினர்கள் தடுத்து வைத்துள்ளதாக சர்வதேசத் தகவல்கள் குறிப்பிட்டுள்ளன. வளைகுடா கடற்பரப்பில் நடவடிக்கைகளை நிறுத்துமாறு ஈரான் அமெரிக்காவிற்கு எச்சரிக்கை விடுத்து சில நாட்கள் கடந்துள்ள நிலையில், இந்த மீட்பு நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. சர்ச்சைக்குரிய அணுத்திட்டம் தொடர்பாக ஈரானுக்கு எதிராக அமெரிக்கா தடைகளை அமுல்படுத்தியுள்ள நிலையில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் பதட்டம் அதிகரித்துள்ளது.

எரிபொருள் மற்றும் உணவுகளுடன் குறித்த ஈரானியர்களை சொந்த நாட்டிற்கு அனுப்பி வைத்துள்ளதாக அமெரிக்க கடற்படை மேலும் குறிப்பிட்டுள்ளது. இதேவேளை உலகின் முக்கிய எண்ணெய் போக்குவரத்து கடல்மார்க்க பிராந்தியத்தில் புதிய கடற்படைப் பயிற்சி நடவடிக்கைகளை அடுத்த மாதமளவில் மேற்கொள்ளப் போவதாகவும் ஈரான் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னதாக அறிவித்திருந்தது.

# அமெரிக்கா மீது குற்றச்சாட்டு




(பீஜிங்)

சீன கம்யூனிஸ் கட்சியின் "சைனா டெய்லி" நாளிதழ் அமெரிக்கா மீது குற்றஞ்சாட்டியுள்ளது இராணுவத்தின் அளவைக் குறைப்பதாக ஒரு பக்கம் சொல்லிக் கொண்டு, மறுபக்கம், ஆசிய பசுபிக் மண்டலத்தில் ஒபாமா இராணுவத்தைக் குவிக்கிறார். அமெரிக்காவின் இதுபோன்ற நடவடிக்கைகள் இருதரப்பிற்கிடையில் இராணுவப் பதட்டத்தையே உருவாக்கும். உலகின் பிற பகுதிகளை விட ஆசிய பசுபிக் மண்டலத்தில் அதிகளவிலான அமைதி நிலவுகிறது. அங்கு ஏன் அமெரிக்கா தனது படைகளைக் குவிக்க வேண்டும்?.இவ்வாறு அந்தப் பத்திரிகையில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

# சரியான வழியில் அமெரிக்கப் பொருளாதாரம்



(வொஷிங்டன்)

அமெரிக்காவின் பொருளாதாரம் சரியான வழியில் சென்று கொண்டிருப்பதாக ஜனாதிபதி பராக ஒபாமா பெருமிதமாகக் கூறியுள்ளார். அமெரிக்காவில் கடந்தாண்டு வேலையில்லாத் திண்டாட்டம் 9.1 சதவீதமாக இருந்தது. இந்நிலையில், கடந்த இரு மாதங்களாக வேலை வாய்ப்பு அதிகரித்து வந்தது. கடந்தாண்டின் டிசம்பரில், கூடுதலாக இரண்டு இலட்சத்து 12 ஆயிரம் வேலைவாய்ப்புகள் அதிகரித்தன. இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் 8.5 சதவீதமாகக் குறைந்தது. இதுகுறித்து ஒபாமா குறிப்பிடுகையில், "2005இல் இருந்து பார்க்கும் போது கடந்தாண்டு, அதிக எண்ணிக்கையில் தனியார் துறையில் வேலைவாய்ப்புகள் உருவாகியுள்ளன. கடந்த 22 மாதங்களில், 32 இலட்சம வேலைவாய்ப்புகள் உருவாகியுள்ளன. அமெரிக்கப் பொருளாதாரம் சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறது. தொடர்ந்து, வேலைவாய்ப்புகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன எனத் தெரிவித்துள்ளார்.

# மரணதண்டனைக் கைதிகள் 11பேர் "எஸ்கேப்"

(அர்பில்)

வடக்கு ஈராக்கில் உள்ள சிறையில் 80 மீற்றர் நீளத்திற்கு பாதாளக் குழி வெட்டி 11 கைதிகள் தப்பித்தனர். வடக்கு ஈராக்கின் குர்தீஷ் மாகாணத்தின் தோகுக் பகுதியில் உள்ள ஸிர்கா சிறைச்சாலையில் போதைப்பொருட்கள் கடத்துதல் போன்ற குற்றங்களுக்காக கைது செய்யப்பட்ட கைதிகள் மரண தண் டனை விதிக்கப்பட்டு அடைக்கப்பட்டிருந்தனர். அவ்வாறு அடைக்கப்பட்ட கைதிகள் 260 அடி நீளத்தில் பூமிக்கடியில், பாதை அமைத்துத் தப்பினர். இது குறித்து சிறை அதிகாரிகளுக்கு தெரியவில்லை. 600 கைதிகளை அடைக்கும் விதத்தில் கடந்த 2008 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்தச் சிறை, குர்தீஷ் மாகண தொழிலாளர் மற்றும் சமூக நல அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# கென்ய துருப்பினர் சோமாலியாவில்

சோமாலியாவில், கென்ய துருப்பினரது இராணுவ நடவடிக்கைகள் தற்போது உச்சக் கட்டத்தில் இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், சோமாலிய இஸ்லாமிய அல்ஷபாப் ஆயுதக் குழுவின் பலம் சரிந்து வருவதாக கென்ய இராணுவத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். அந்தக் குழு வின் தலைமைக்குள் ஏற்பட்டுள்ள பிளவு காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், கென்ய இராணுவப் பேச்சாளரின் கூற்றை அல்ஷபாப் ஆயுதக்குழு நிராகரித்துள்ளது. இந்தநிலையில், கென்யாவிற்கு செல்லக் கூடிய மக்களுக்கான தமது பயண அறிவுறுத்தலை பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ளது. தலைநகர் நைரோபியில் பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெறுவதற்கான அபாயம் இருப்பதனால், அரச அலுவலகங்கள் அங்காடிகள் மற்றும் மக்கள் கூடும் இடங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு ஆலோசனை வெளியிடப்பட்டுள்ளது.

# வேலை வாய்ப்புச் செய்திகள்

சங்கானையில் உள்ள அச்சகம்ஒன்றிற்கு கணினியில் தட்டச்சுத் தெரிந்த பெண் ஊழியர் தேவை. ஆர்வமுள்ள்வர் உடனடியாக 0773657317, 0212250082இற்கு தொடர்பு கொள்ளவும்.

ஆண் தாதிய உத்தியோகத்தர் அல்லது பயிலுநர், சாதாரண தொழிலாளி, சிறு பிள்ளைகளைப் பராமரிக்கப் பெண் ஆகியோர் தேவை. அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். ஆர்வமுள்ளவர்கள் சான்றிதழ்களுடன் வைத்தியப்பணிப்பாளர், சென்றல் நேஸிங் ஹோம், 350, பலாலி வீதி, திருநெல்வேலி என்ற முகவரிக்கு நேரில் வரவும்.

முன்னணிவங்கி ஒன்றுடன் தொடர்புடைய நிறுவனத்திற்கு வியாபார அபிவிருத்தி அதிகாரிகள் தேவை. நிரந்தர தொழில், குத்தகை காப்புறுதியில் அனுபவமுள்ள 35 வயதிற்கு கீழ்ப்பட்டவர்கள் (கொழும்பு) தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0114422188 - 0727771244 0727771288 இற்கு தொடர்பு கொள்ளவும்.

அச்சகத்துறைக்கு தேவையான கடதாசி, மை போன்றவற்றை இறக்குமதி செய்து வியாபாரம் செய்யும் நிறுவனத்திற்கு வடக்கில் பணியாற்ற சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் உறவினர் அல்லாத இருவருடைய சிபாரிசுடன் சுயவிபரக் கோவையை Velocity@sltnet.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பான்சிப் பொருட்கள் மற்றும் மணிக்கூடு விற்பனை நிலையத்திற்கு பெண் வேலையாள் தேவை. முன்அனுபவம் உள்ளவர்களும், மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களும் விரும்பத்தக்கது. பயிலுனரும் தொடர்பு கொள்ளலாம். ஆர்வமுள்ளவர்கள் பிரகாஸ் வோச் அன் பான்சி, கஸ்தூரியார் வீதி ( பள்ளிவாசல் வீதி) யாழ்ப்பாணம், 0779793300 இற்கு தொடர்பு கொள்ளவும்.

உணவு, குடிவகை பரிமாறுபவர்(18-30 வயது) ஆங்கிலம், தமிழில் நன்கு உரையாடக் கூடியவர். பொருட்கள் வாங்கிப் பயன்படுத்தும் வாகனத்திற்கு சாரதி தேவை. ஆர்வமுள்ளவர்கள் முகாமையாளர், Green Grass Hotel No.33 ஆசீர்வாதம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் இற்கு தொடர்பு கொள்ளவும்.

சோடாப் போத்தல்களை வாகனங்களில் ஏற்றி இறக்குவதற்கு வேலையாட்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் பிள்ளையார் ஸ்ரோர்ஸ், ஒட்டுமடம் சந்தி, யாழ்ப்பாணம், 021-2225595 இற்கு தொடர்பு கொள்ளவும்.

மலேசியாவில் உள்ள முன்னணி நிறுவனம் ஒன்றிற்கு 25 பணிப்பெண்கள் தேவை. தமிழ், ஆங்கிலம் பேசத்தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை.தங்குமிடம், உணவு, மருத்துவ வசதி இலவசம். ஆர்வமுள்ளவர்கள் மிலேனியம் மான்பவர் சேர்விசஸ் 34/1 ஈஸ்வரி வீதி, பாமன்கடை கொழும்பு -06, 0112 2367820, 01122367970 இற்கு தொடர்பு கொள்ளவும்.

மாலை 3 மணிதொடக்கம் இரவு 11மணிவரை பணியாற்றக்கூடிய எழுதுவினைஞர்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் இன்று காலை 9மணிக்கு சுயவிபரங்களுடன் பொதுமுகாமையாளர், உதயன் பணிமனை, 361 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

ஜெயா இண்டஸ்ரீஸ் இல் பணியாற்ற பெண் ஊழியர்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0777110166இற்கு தொடர்பு கொள்ளவும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள Tilko Travels & Tours இற்கு Ticketing Staff,Tour Operators, Tour Guides. தேவை ஆர்வமுள்ளவர்கள் 0777696443, 0770780393இற்கு தொடர்பு கொள்ளவும்.

Tilko city Hotel இல் ஞாயிற்றுக்கிழமைகளில் Herbal Beauty Care இல் பணியாற்ற அழகுக்கலை பயிலுநர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0777696443, 0770780393 இற்கு தொடர்பு கொள்ளவும்.

Andra Digital Image இல் வடிவமைப்பாளர் (கணினியில்) ஒப்பு நோக்குநர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 11.01.2012 புதன்கிழமை 9.மணி தொடக்கம் 1 மணிவரை இடம்பெறவுள்ள நேர்முகத் தேர்விற்கு சுயவிபரக்கோவையுடன் 379/167, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு சமுகம் தரவும். மேலதிக விபரங்களுக்கு 021 7201264, 0776622981 இற்கு தொடர்பு கொள்ளவும்.

தம்ரோ நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகியஇடங்களில் பணியாற்ற தொழில் நுட்ப வியலாளர்கள் தேவை. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தொழில் நுட்பச் சான்றிதழ் பெற்றவரும், குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு 25 km சுற்றுவட்டத்தில் வசிப்பவரும், உறவினர் அல்லாத இரண்டு சிபாரிசுடன் சுயவிபரக்கோவையை The Human Resources Manager, Damro No.361 Kandy Roed Nitrambuwa அல்லது hrm@damro.lk இற்கு அனுப்பி வைக்கவும்.

# ஜே.வி.பி. அதிருப்திக்குழுவுக்கு புலிகளுடன் நெருங்கிய தொடர்பு

## வலுவடையும் சந்தேகம்

(கொழும்பு)

ஜே.வி.பியின் அதிருப்திக் குழுவினர் விடுதலைப்புலிகளின் ஆதரவுக் குழுக்களுடன் தொடர்புகளை கொண்டிருக்கலாம் என்று பாதுகாப்பு தரப்பினரும் ஜே.வி.பி தரப்பினரும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளனர்.

ஜே.வி.பியின் அதிருப்திக் குழுவுக்கு குமார் மாத்தயா என்ற குமார் குணரட்னம் என்ற தமிழர் தலைமை தாங்குவதாகவும், அவர் அவுஸ்ரேலியாவில் வசித்து வருவதாகவும் தற்போது இலங்கைக்கு வந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. குமார் குணரட்னம் என்பவர் கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையானின் செயலாளரை சந்தித்ததாகவும் சில மாதங்களுக்கு முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், போருக்கு பின்னர் ஜே.வி.பியில் இருந்து வெளிப்படையாக செயற்பட்ட அதிருப்திக் குழு, தமிழர்கள் சார்ந்த விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தது. குறிப்பாக போரில் காணாமல் போனவர்களை கண்டுபிடித்து தருமாறு கோரி வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் போராட்டங்களை நடத்தி வருகிறது. இந்தநிலையிலேயே இந்தக்குழுவின் நடவடிக்கையாளர்களான லலித்குமார் மற்றும் குகன் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் வைத்து கடந்த மாதம் காணாமல் போயினர். அவுஸ்ரேலியாவுக்கு செல்வதற்காக கட்டுநாயக்கவுக்கு சென்ற குமார் குணரட்னத்தின் மனைவி என்று கூறப்பட்டவர் கடந்த புதுவருட தினத்தன்று விசாரணை செய்யப்பட்டார். அதிருப்திக்குழுவுக்கு விடுதலைப்புலிகளின் ஆதரவுக்குழுக்களே நிதியுதவி செய்வதாகவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

# மரக்கறிகளுக்கு பிளாஸ்ரிக் கூடை புதிய சுற்றுநிருபம் அடுத்தவாரம்



மரக்கறிப் போக்குவரத்தின்போது பிளாஸ்டிக் கூடைகளைப் பயன்படுத்துவது தொடர்பில் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட புதிய சுற்றுநிருபம் அடுத்தவாரம் வெளியிடப்படவுள்ளதாக நுகர்வோர் சேவைகள் அதிகாரசபை அறிவித்துள்ளது.

பிளாஸ்டிக் கூடைகளில் சந்தைக்கு எடுத்துச் செல்லப்படவேண்டிய மரக்கறி மற்றும் பழவகைகள் குறித்து அந்த சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்படவுள்ளதாக அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் கூறியுள்ளார். இம்மாதம் 15 ஆம் திகதிக்கு பின்னர் மரக்கறி மற்றும் பழ வகைகளை பிளாஸ்டிக் கூடைகள் இன்றி ஏற்றிச்செல்லும் நபர்களை சுற்றிவளைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையில் விசேடகுழுவொன்று ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் நுகர்வோர் சேவைகள் அதிகார சபை தெரிவித்துள்ளது. இதன்போது அடையாளம் காணப்படுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் மேலும் கூறியுள்ளார்.

# இலங்கையர் மூவர் ஜேர்மனியில் கைது

இலங்கை அகதிகள் என சந்தேகிக்கப்படும் மூன்று ஆண்கள் ஜேர்மன் டேர்பின் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

போலி கடவுச் சீட்டை காட்டி பயணிக்க முயற்சித்த காரணத்தினால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை கைது செய்யும் போது ஒருவர் தப்பி ஓடியுள்ளதாகவும், தெரிவிக்கப்படுகிறது. நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கைது செய்யப்பட்ட மூவரின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ள போதும் அதன் உண்மைத் தன்மையை அதிகாரிகள் உறுதிப்படுத்தவில்லை. இவர்கள் இலங்கையர்கள் என கூறப்பட்ட போதும் இந்திய கடவுச் சீட்டே வைத்திருந்ததாக கூறப்படுகிறது.

# வவுனியாவில் வீதிவிபத்து; சிறுமி உட்பட இருவர் பலி

(வவுனியா)

வவுனியா-ஹொரவப்பொத்தான பிரதான வீதியின் குடாகச்சகுடிய என்ற இடத்தில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் இருவர் உயிரிழந்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். மோட்டார் வண்டி ஒன்றும் ரக்டர்வண்டி ஒன்றும் மோதிக் கொண்டதில் இந்த விபத்து நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. மோட்டார் வண்டியில் பயணித்த இருவருமே உயிரிழந்துள்ளனர். விபத்தில் காயமடைந்த 4 வயதுச் சிறுமி படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். விபத்திற்கு காரணமானவர் என கருதப்படும் ரக்டர் சாரதியை கைது செய்த வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# லசந்த கொலை; 3 ஆண்டு பூர்த்தி

(கொழும்பு)

சுதந்தர ஊடகத்துறைக்கு சேவையாற்றிய சிரேஷ்ட ஊடகவியாலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டு நேற்றுடன் மூன்று வருடங்கள் பூர்த்தியாகின்றன. 1958 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஐந்தாம் திகதி கொழும்பில் பிறந்த லசந்த விக்ரமதுங்க, தனது 50 ஆவது வயதில் படுகொலை செய்யப்பட்டார். அவர் திறமைமிகு சட்டத்தரணிகளில் ஒருவராகவும் பிரபல்யமடைந்திருந்தார். கொலை செய்யப்பட்டபோது லசந்த விக்ரமதுங்க சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் கடமையாற்றி வந்தார். மனித உரிமை செயற்பாட்டாளரான அவர் 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி கல்கிசை பிரதேசத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் கொல்லப்பட்டார்.

# கற்கை பீடங்களுக்கு மூடுவிழா தொடர்கிறது போராட்டம்

(கொழும்பு)

சிறி ஜயவர்த்தன பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பீடங்களும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. மாணவர்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகத்தின் நல்லொழுக்க அதிகாரி எம்.டபிள்யூ ஜயசுந்தர கூறியுள்ளார். அண்மையில் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு பிரிவு உறுப்பினர்கள் மீது மாணவர்கள் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இந்தச்சம்பவத்தின் காரணமாக மீண்டும் அமைதியின்மை ஏற்படுவதை தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கமைய நேற்று முற்பகல் எட்டு மணிக்கு பின்னர் மாணவர்கள் அனைவரும் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும் பல்கலைக்கழக வளாகத்தில் தொடர்ச்சியாக சத்தியக்கிரகப்போராட்டத்தை மேற்கொண்டு வரும் மாணவர்கள் தொடர்ந்தும் அங்கு தங்கியுள்ளதாக நல்லொழுக்க அதிகாரி எம். டபிள்யூ ஜயசுந்தர கூறியுள்ளார்.

# ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் அழைப்பை நிராகரித்தது இலங்கை

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் நூற்றாண்டு விழாவில் பங்குபற்றுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை அரசாங்கம் நிராகரித்துள்ளது. லண்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் உலகத் தமிழர் பேரவைக்கும் அழைப்பு விடுக்கப்பட்டமையே இந்நிராகரிப்புக்கு காரணமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. தென்னாபிரிக்காவின் ஆளும் கட்சியான ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் நூற்றாண்டு விழா நேற்று அக்கட்சி ஸ்தாபிக்கப்பட்ட புளூம்பொன்டெய்ன் நகரில் ஆரம்பமாகியது. இவ்விழாவில் பங்குபற்றுமாறு சுமார் 40 நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உலகத் தமிழர் பேரவைக்கு உத்தியோகபூர்வ அந்தஸ்து அளித்து அரசாங்கமொன்றின் தூதுக் குழுவுக்கு சமமாக நடத்தப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது. வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் இலங்கையின் சார்பில் இவ்விழாவில் பங்குபற்றுவதற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது. உலகத் தமிழர் பேரவையின் சார்பில் வண.பிதா. கலாநிதி எஸ்.ஜே.இமானுவல் தலைமையிலான தூதுக்குழுவினர் இவ்விழாவில் பங்குபற்றுவதற்காக ஏற்கெனவே தென்னாபிரிக்காவுக்குச் சென்றுள்ளனர்.

# களனி பிரதேச சபையில் குழப்பம் மேர்வின் மீது குற்றச்சாட்டு


(கொழும்பு)

அமைச்சர் மேர்வின் சில்வாவின் பிழையான செயற்பாடுகளினால் களனி பிரதேச சபையை உரிய முறையில் வழிநடாத்த முடியாதுள்ளதாக களனி பிரதேச சபைத் தலைவர் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அமைச்சரின் இத்தகைய செயற்பாட்டின் காரணமாக களனி பிரதேச மக்கள் பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த, பொருளாதார அபிவிருத்தி அமைர்சர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சர்கள் மேர்வின் சில்வாவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

# அதிவேக வீதியில் ஆட்டுக்குட்டி



(கொழும்பு)

அதிவேக நெடுஞ்சாலைக்குள் ஆட்டுக்குட்டி நுழைந்தமையால் ஐயாயிரம் ரூபா அபராதப்பணம் செலுத்தவேண்டிய நிலை ஆட்டுக்குட்டியின் உரிமையாளருக்கு ஏற்பட்டது. இந்நெடுஞ்சாலையில் எல்பிட்டிய நுழைவாயிலுக்கூடாக நுழைய ஆட்டுக்குட்டியை அனுமதித்த தன் மூலம் நெடுஞ்சாலையின் சுமுக போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தியதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. 10 ஆடுகள் கொண்ட ஆட்டுக்கூட்டத்திலிருந்து ஒரு ஆடு நெடுஞ்சாலைக்குள் ஊடுருவியதாகவும் அதிர்ஷ்டவசமாக இச்சம் பவத்தினால் ஒருவரும் காயமடையவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த ஆட்டுக்குட்டி எல்பிட்டிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதன்

## அபராதம் 5000ரூபா

பின்னர் அதன் உரிமையாளருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. இதேவேளை காலையிலும் இரவுநேரத்திலும் இந்நெடுஞ்சாலையில் பயணிக்கும் சாரதிகளை பனி காரணமாக அவதானமாக இருக்கும்படி பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

# தீயில் கருகிய ஆணின் சடலம்

மட்டக்களப்பு -சந்திவெளியில் கருகிய நிலையில் சில்லறைக்கடை உரிமையாளர் ஒருவரின் சடலம் ஏறாவூர் பொலிஸாரினால் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு மீட்கப்பட்டுள்ளது. சந்திவெளியைச் சேர்ந்த ஐயாத்துரை யோகன் (வயது-42) என்பரது சடலமே கருகிய நில்லையில் மீட்கப்பட்டுள்ளது. சம்பவதினத்தன்று பூட்டியவாறு காணப்பட்ட கடையின் உட்பகுதியிலிருந்து தீச்சுவாலை வெளிவந்தமையையடுத்து பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார், சடலத்தை மீட்டு செங்கலடி வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

# கருங்கல் அகழ்வு; கட்டுப்படுத்த ஏற்பாடு

காடுகளுக்குள் சட்டவிரோதமாக கருங்கல் உடைப்பவர்களை கைது செய்வதற்கான சுற்றிவளைப்புக்கள் இடம்பெறுவதாக மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது. இந்த சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சிலருக்கு எதிராக ஏற்கனவே வழக்குத்தாக்கல் செயயப்பட்டுள்ளதாக அதிகார சபையின் தலைவர் சரித ஹேரத் தெரிவித்தார். எவ்வாறாயினும் ஒரு சில பகுதிகளில் கருங்கல் உடைப்பதற்கு வன ஜீவராசிகள் மற்றும் வன இலாகா திணைக்களம் அனுமதி அளித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

# சுற்றுலாப் பயணிகளுக்கு புதிய அனுமதிச்சீட்டு

(கொழும்பு)

கலாசார முக்கோண வலயத்திலுள்ள தொல்பொருள் பெறுமதிமிக்க இடங்களை பார்வையிட வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு புதிதாக அனுமதிச்சீட்டு ஒன்றை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதிய அனுமதிச் சீட்டுடன் DVD ஒன்றையும் சுற்றுலாப் பயணிகளுக்கு விநியோகிக்கவுள்ளதாக மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் போராசிரியர் நிமல் டி.சில்வா குறிப்பிட்டார்.

# தங்கம்மா அப்பாக்குட்டியின் 87ஆவது பிறந்தநாள் நிகழ்வு



(தெல்லிப்பளை)

யாழ்ப்பாணம், தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்தின் முன்னாள் தலைவராக செயற்பட்ட அமரர் தங்கம்மா அப்பாக்குட்டியின் 87 ஆவது பிறந்த நாள் அறக்கொடை நிகழ்வு நேற்று முன்தினம் காலை துர்க்கையம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது

இதன்போது, உறவினர்களால் தங்கம்மா அப்பாக்குட்டியின் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது

ஆலய நிர்வாக சபைத் தலைவர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட உடற்கூற்றியல் துறைத் தலைவர் கலாநிதி செல்வி சகுந்தலா அம்பிகைபாகன், வட பிராந்திய சுகாதார சேவைகள் யாழ். மாவட்டப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், முல்லைத்தீவு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது, அறக்கொடையாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் என்பு முறிவுப் பிரிவுக்கு ஒரு லட்சம் ரூபா உதவித்தொகையும் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்கு ஐம்பதாயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது

இதேவேளை, துணுக்காய் கல்வி வலயத்தில் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி கற்கும் வறுமைக்கோட்டிற்க்கு உட்பட்ட 100 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் நிதியாக இரண்டு இலட்சம் ரூபா துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் வழங்கப்பட்டது

ஓய்வுப்பெற்ற அதிபர் சிற்பி. சிவசரவணபவன், ஓய்வுப்பெற்ற சுகாதாரப் பரிசோதகர் பொன்னையா செல்லப்பா, புகைப்படக் கலைஞர் எஸ்.கதிரவேலு, சைவ சமய பௌராணிகர் பண்டிதை திருமதி. சிவபாக்கியம் பாலநாதன், மற்றும் சிற்பக் கலைஞர் எ.வி.ஆனந்தன் ஆகியோர் இதன்போது விருதுகளை பெற்றுக் கொண்டார்கள்.

# வேலணை பெருங்குள முத்துமாரியம்மன் திருவெம்பாவை இறுதித் திருவிழா



(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேசத்துக்கு உட்பட்ட பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் திருவெம்பாவை இறுதி நிகழ்வை முன்னிட்டு தெப்பத் திருவிழா நேற்று இடம் பெற்றது.

அம்பாள் தெப்பத்தில் எழுந்தருளி நீரில் படகில் உலா வந்தார். அம்பாளின் ஆசியைப் பெறுவதற்கு பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு அம்பாளின் நல்லாசியை பெற்றுக்கொண்டனர்.

முன்னைய காலங்களில் தெப்பத்திருவிழாவை குளத்தில் நடத்துவதற்கு முடியாமல் இருந்துள்ளது. இக்குளம் அண்மையில் புனரமைக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் முயற்சியினாலும் ஆளுநர் செயற்திட்டத்தாலும் வேலணை பிரதேச சபைத் தலைவரின் வேண்டுகோளுக்கு இணங்க புனரமைக்கப்பட்டுள்ளது.

இப்புனரமைப்பு திட்டத்தின் மூலம் இத் தெப்பத்திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றதை முன்னிட்டு வேலணை பிரதேச பக்தர்கள் இக்குளத்தை புனரமைப்பதற்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துள்ளனர். (85)

# ரஷ்யப் பெண்மணி வல்லுறவுக்குட்படுத்தப்படவில்லை

அண்மையில் தங்காலை பிரதேச ஹோட்டல் ஒன்றில் தாக்குதலுக்குஇலக்காகி உயிரிழந்த பிரித்தானிய பிரஜை குராம் சாக்கீயின், ரஷ்ய தோழி அலெக்ஸான்ட்ரோவ்னா பாலியல் வல்லுறவுக்கு உப்படுத்தப்படவில்லை என லங்கா ஹொஸ்பிட்டல் தனியார் மருத்துவமனை அறிவித்துள்ளது.

அலெக்ஸான்ட்ரோவ்னா ரஷ்ய தூதரகத்தில் வாக்குமூலம் அளித்த போது பாலியல் ரீதியான துன்புறுத்தல் குறித்து எவ்வித முறைப்பாட்டையும் செய்யவில்லை என லங்கா ஹொஸ்பிட்டல் மருத்துவமனையின் [illegible]தம நிறைவேற்று அதிகாரி லக்கீ பீரிஸ்தெரிவித்துள்ளார்.

அலெக்ஸான்ட்ரோவ்னா, பாலியல் ரீதியான வன்முறைக்கு உட்படுத்தப்பட்டாரா என்பது குறித்து மருத்துவ மனையில் பல்வேறு பரிசோதனைகள் நடத்தப்பட்டதாகவும், பரிசோதனைகளின் மூலம் பாலியல் வல்லுறவு இடம்பெறவில்லை என்பது நிருபணமாகியுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அல்ட்ரா சவுண்ட் முறையிலும் பரிசோதனை நடத்தப்பட்டதாகவும் தமது அறிவுக்கு எட்டிய வகையில் பாலியல் வன்முறை இடம்பெற்றிருக்க வாய்ப்பு இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அலெக்ஸான்ட்ரோவ்னா குடும்ப உறுப்பினர்கள் மொஸ்கொவிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

## காணி, பொலிஸ்...

கூட்டமைப்பிற்கும் இடையில் அடுத்த சுற்று பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதன் போது காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதுகுறித்து கவனம் செலுத்தப்படும் எனவும் அமைச்சர் ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

## தண்ணி முறிப்பு...

மீள்குடியேற்றத்திற்காக வருவோர், தற்போது வசித்து வரும் கிராம அலுவலரின் உறுதிப்படுத்தல் கடிதம் மற்றும் அப்பகுதி பிரதேச செயலரின் ஒப்பம் என்பன குறிப்பிட்ட பதிவு நீக்கற் கடிதத்துடன் வருகை தருமாறு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (04)

# விளைவுகளை அனுபவிக்கின்றனர்



கொழும்பின் குடு சில்வாவும் களனியின் குணு (ஊத்தை) சில்வாவும் தமது செயற்பாடுகளின் பலனை இன்று அனுபவிக்கின்றனர் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

மருத்துவ சிகிச்சைக்காக வைத்தியசாலையொன்றுக்கு நேற்று செல்லும்போது வழமை போல் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

களனி பிரதேச சபைத் தலைவர் கடைசி கட்டத்திலாவது உண்மையை உணர்ந்துகொண் டமை குறித்து தான் மகிழ்வடைவதாகவும் சரத் பொன்சேகா கூறினார்.

# இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டுக்கான க.பொ.த. (சா/த) பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுக்காக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் இன்று திறக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஏனைய பாடசாலைகள் கடந்த 2ஆம் திகதி திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எப்.எஸ்)

## அரசியல்...

பொது நிகழ்வுகளில் ஒன்றாகத் தோன்றுவதில்லை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு சில சந்தர்ப்பங்களில் பசில் ராஜபக்ஷவும், கோத்தாபய ராஜபக்ஷவும் ஒருவருக்கொருவர் முரண்பட்ட ஆலோசனை வழங்கியுள்ளனர்.

அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணப் பணிகளுக்காக பசில் ராஜபக்சவும், கோத்தாபய ராஜபக்ஷவும் இரு வெவ்வேறு நிறுவனங்களுக்கு ஒப்பந்தங்களை வழங்க விரும்பியிருந்தனர்.

இறுதியாக பசில் ராஜபக்ஷ மற்றும் கோத்தாபய ராஜபக்ஷ ஆகிய இருவரும் பரிந்துரைத்த நிறுவனங்களுக்கு அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணப் பணிகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒப்படைத்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களை ஆளும் கட்சியில் இணைத்துக் கொள்வதனை கோத்தாபய ராஜபக்ஷ விரும்பியிராத நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களை ஆளும் கட்சியில் இணைத்துக் கொள்வதற்கு பசில் ராஜபக்ஷ விருப்பம் கொண்டிருந்தார்.

ஜே.வி.பி.யுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேண வேண்டும் என்பதே கோத்தாபய ராஜபக்ஷவின் விருப்பமாக இருந்தது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வு காணவேண்டும் என்ற நிலைப்பாட்டை பசில் ராஜபக்ஷ கொண்டிருந்த நிலையில், இராணுவ ரீதியில் தீர்வு காணப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டை கோத்தாபய ராஜபக்ஷ கொண்டிருந்தார் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட இரகசிய தகவல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையர் ...

பயணிக்க முயற்சித்த காரணத்தினால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை கைது செய்யும் போது ஒருவர் தப்பி ஓடியுள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட மூவரின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ள போதும் அதன் உண்மைத் தன்மையை அதிகாரிகள் உறுதிப்படுத்தவில்லை. இவர்கள் இலங்கையர்கள் என கூறப்பட்ட போதும் இந்திய கடவுச் சீட்டே வைத்திருந்ததாக கூறப்படுகிறது.

## ஓட்டோ சாரதிகள்...

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் அதிகளவில் முற்சந்திகள், நாற்சந்திகள் உள்ளன. இதுவும் போக்குவரத்து விதிகளை ஒழுங்காக கடைப்பிடிக்காமைக்கு ஒரு காரணம் ஆகும்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் குற்றச்செயல்களுடன் ஒரு சில முச்சக்கர வண்டிகள் சம்பந்தப்பட்டிருப்பது எமக்குத் தெரியும். எனவே அதிகம் பணம் தருகிறார்கள் என்பதற்காக குற்றச் செயல்களுக்கு உடந்தையாக இருக்க வேண்டாம்.

முச்சக்கர வண்டிச் சாரதிகளின் ஒத்துழைப்புக் கிடைத்தால் யாழ்.மாவட்டத்தில் இடம்பெறும் 75 வீதமான குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் தெரிவித்தார்.

போக்குவரத்து விதிகளை மீறும் முச்சக்கர வண்டிச் சாரதிகளை அவர்களின் குடும்ப நிலையை கருத்தில் எடுத்து தாம் கடுமையாக தண்டிப்பதில்லை எனவும் அதிகமான சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு அறிவுரை கூறி அனுப்பி வருகிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## முடங்கியுள்ள...

இலங்கையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தையும், நிலையான சமாதானத்தையும் ஏற்படுத்துவது தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சர் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தத்தைக் கொடுப்பதற்கான வாய்ப்புகளும் உள்ளன.


இந்திய வெளியுறவு அமைச்சருடன் அமைச்சின் இணைச் செயலாளர் ஹர்சவர்த்தன், இலங்கைக்கான ஆலோசகர் ராகவேந்திர சாஸ்திரி ஆகியோரும் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாக அவ்வூடகம் மேலும் தெரிவித்துள்ளது.

## அமெரிக்க ...

உயர்மட்ட அதிகாரிகளே கொழும்பு வரவுள்ளதாக நம்பகமான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இவர்கள் அரசதரப்பு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக அமெரிக்க அதிகாரிகள் முக்கியமாக ஆராயவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



# முஸ்லிம் மக்களுக்கு உதவி வழங்காத யு.என்.எச்.சி.ஆர். மீது சட்ட நடவடிக்கை

## அமைச்சர் றிசாட் தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனத்திற்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கத் திட்டமிட்டுள்ளதாக அமைச்சரும், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான றிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

மூன்று தசாப்தங்களாக நாட்டில் நீடித்த யுத்தத்தில் இடம்பெயர்ந்தமுஸ்லிம் மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் மேற்கொள்ளத் தவறியுள்ள காரணத்தினால் அந்த நிறுவனம் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து சட்டத்துறை சார் நிபுணர்களுடன் ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

யுத்தத்தில் இடம்பெயர்ந்து மீள்குடியேறியவர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாவினை ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் வழங்கிய போதிலும், முஸ்லிம் மக்களுக்கு இந்த உதவி வழங்கப்படவில்லை.

யுத்தம் காரணமாக வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆயிரக்கணக்கான முஸ்லிம்களை மீள்குடியேற்றுவது குறித்து ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனத்துடன் கடந்த இரண்டு ஆண்டுகளாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகின்றது.

1990 ஆம் ஆண்டு வடக்கில் வாழ்ந்து வந்த ஒரு இலட்சத்திற்கும்திற்கும் மேற்பட்ட முஸ்லிம் மக்களை புலிகள் பலவந்தமாக வெளியேற்றினர்.

இடம்பெயர்ந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் புத்தளம் மாவட்டத்தில் தற்காலிகமாக வாழ்ந்து வருகின்றனர்.

ஏனைய இடம்பெயர் மக்களுக்கு வழங்கப்படும் நலன்கள் முஸ்லிம்மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்றார்.

இதேவேளை, முஸ்லிம் மக்கள் நீண்ட காலத்திற்கு முன்னதாகவே இடம்பெயர்ந்துள்ளதாகவும், அண்மையில் இடம்பெயர்ந்தவர்களுக்கே உதவிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் அறிவித்துள்ளது.

# மின்குமிழ் பொருத்தலில் முறைகேடு தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை

(கோப்பாய்)

கோப்பாய் பிரதேசத்தின் உள்ளூர் வீதிகளுக்கென ஒதுக்கப்பட்ட மின்குமிழ்களை வலி. கிழக்கு பிரதேச சபை தவறான முறையில் பொருத்துதவற்கு எடுக்கும் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தக் கோரி அப்பகுதி மக்கள் வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவர் இ.ஜங்கரனிடம் மனுவொன்றைக் கையளித்துள்ளனர்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவினால் வழங்கப்பட்ட மின்குமிழ்கள் தற்போது ஆட்சியிலுள்ள வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச சபையின் கூட்டமைப்பு உறுப்பினர்கள் தமது விருப்பு வெறுப்புக்கேற்ப பிழையான முறையில் பொருத்துவதாகவும், எனவே இந்தச் செயற்பாடு தடுத்து நிறுத்தப்பட வேண்டும் எனவும் அவர்கள் தமது மனுவில் தெரிவித்துள்ளனர்.

# ரயில் பெட்டிகளை குத்தகைக்கு தனியார்துறைக்கு வழங்க திட்டம்

(கொழும்பு)

பொருட்களை ஏற்றிச்செல்லும் ரயில் பெட்டிகளை குத்தகை அடிப்படையில் தனியார் துறையினருக்கு வழங்குவதற்கான திட்டமொன்றை செயற்படுத்தவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்காக ஏற்கனவே விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் ரயில்வே திணைக்களத்தின் வருமானத்தை அதிகரிக்கும் திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன் மூலம் தனியார் நிறுவனங்கள் தமது பொருட்களை குறைந்த செலவில் ஏற்றிச் செல்வதற்கான வசதி கிடைக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இந்திய புலமைப் பரிசில் விபரங்கள் வெளியீடு

(கொழும்பு)

எதிர்வரும் 2012 - 2013 ஆம் ஆண்டு கற்கை நெறிக்களுக்காக இலங்கை மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்க இந்திய அரசாங்கம் முன்வந்துள்ளது.

இலங்கைக்கான இந்தியத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் இது தொடர்பாக விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி இந்தியாவில் தமது கற்கைநெறியை மேற்கொள்வதற்கான 47 புலமைப் பரிசில்களை வழங்க இந்தியா தீர்மானித்துள்ளது.

நேரு ஞாபகார்த்த புலமை பரிசில் திட்டத்தின் அடிப்படையில் 40 புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ள அதேவேளை, பொதுநலவாய புலமை பரிசில்கள் திட்டத்தின் கீழ் 5 புலமை பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இது தவிர IOR, ARC திட்டத்தின் கீழ் இரண்டு பட்ட பிற்படிப்பிற்கான புலமை பரிசில்கள் வழங்கப்படவுள்ளது.

புலமை பரிசில்கான விண்ணப்பங்கள் இந்திய தூதரகத்தினால் எதிர்வரும் 27 ஆம் திகதி வரையில் ஏற்றுக்கொள்ளப்படும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை www.mohe.gov.lk என்ற இணையத்தின் ஊடாக அறிந்து கொள்ள முடியும்.

# ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பெறுபேறு மீளாய்வுக்கு விண்ணப்பம்

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களின் மீள்திருத்தத்திற்கு ஏற்கனவே ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் விண்ணப்பித்துள்ளதாக கல்வித்துறை சார்ந்த தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன. இம்மீள்திருத்த விண்ணப்பத்திற்கான கால எல்லை ஜனவரி 17 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் இப் பரீட்சைக்குத் தோற்றிய 294,800 பேரில் 142,000 பேர் தற்போது 3 பாடங்களிலும் சித்தியடைந்துள்ளனர்.

இம்மீள்திருத்திற்கு டிசம்பர் 29 முதல் ஜனவரி 9 ஆம் திகதிவரை விண்ணப்பிக்கலாம் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்திருந்தது. எனினும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் மீள்திருத்தத்திற்கு விண்ணப்பிப்பதற்கு வசதியாக ஜனவரி 17 ஆம் திகதிவரை இக்கால எல்லை நீடிக்கப்பட்டது.

இம்மீள் திருத்தத்திற்கான கட்டணம் 750 ரூபாவாகும். இம்மீள்திருத்த விண்ணப்பங்களின் மூலம் அரசாங்கத்திற்கு சுமார் 100 மில்லியன் ரூபா வருமானம் கிடைக்கும் என இலங்கை ஆசிரியர்கள் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பெறுபேறு தொடர்பாக விசாரிப்பதற்கு ஜனாதிபதி ஐவர் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளார். அதேவேளை. பரீட்சைகள் திணைக்களம் மீள்திருத்தத்திற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. இது குழப்ப நிலையை மேலும் அதிகரிக்கும்.


மீள்திருத்தமானது ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள புள்ளிகளை மீள்மதிப்பீடு செய்வதாகும். அது விடைத்தாள்களை முற்றாக மீள்திருத்தம் செய்வதல்ல.

மாவட்ட தேசிய ரீதியான தரவரிசை மற்றும் இஸட் புள்ளிகளில் குழப்பம் இருந்தால் அதை விடைத்தாள்களை மீள்திருத்தம் செய்வதன் மூலம் தீர்வுகாண முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இம்மீள்திருத்த விண்ணப்பம் கோரப்பட்டிருப்பது மாணவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கல்ல, மாறாக அரசாங்க மற்றும் கல்வித்துறை அதிகாரிகளின் தவறை மறைப்பதற்கே ஆகும் என அனைத்துப் பல்லைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சஞ்சீவ பண்டார தெரிவித்தார்.

ஏற்கனவே 80 சதவீதமானோர் விண்ணப்பித்துள்ளனர். இது 100 சதவீதமாக அதிகரிக்கும் என நாம் நம்புகிறோம் எனவும் சஞ்சீவ பண்டார கூறினார்.

# உள்ளூராட்சி அதிகார சபைக்கான சட்டமூலத்தை எதிர்க்கிறது ஜே.வி.பி.



(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள உள்ளூராட்சி அதிகார சபைகள் திருத்தச் சட்டமூலத்தை ஜே.வி.பி. எதிர்த்துள்ளது.

இச்சட்டமூலம் நாடாளு மன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டால், தற்போதுள்ள தேர்தல், அரசியல் பிரச்சினைகள் மேலும் தீவிரமாகும் என நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள தேர்தல் முறையில் மக்களின் ஜனநாயக தீர்ப்பு முறையாக பிரதிபலிக்கப்படவில்லை. எனினும் தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு உத்தேச உள்ளூராட்சி அதிகார சபைகள் திருத்தச் சட்டமூலம் தீர்வாகாது.

தற்போது எந்தத் தேர்தல் காலத்திலும் மக்களின் ஜனநாயக உரிமைகளை ஒடுக்கு வதற்கு அச்சுறுத்தல்களும் தூண்டுதல்களும் பயன் படுத்தப்படுகின்றன. எனவே நாடாளுமன்றத்திலோ ஏனைய ஆட்சியதிகார சபைகளிலோ மக்களின் ஆணை பிரதிபலிக்கப்படுவதாக நாம் கூறமுடியாது.

பிரச்சினைகளுக்கான உண்மையான காரணத்தை தீர்ப்பதற்குப் பதிலாக, 17 ஆம் திகதி புதிய சட்டமூலமொன்றை அரசாங்கம் நாடாளுமன்றத்திற்கு கொண்டுவரவுள்ளது.

புதிய சட்டமூலத்தின் கீழ் தேர்தலொன்றில் 51 சதவீத வாக்குகளைப் பெறும் கட்சியொன்று 70 சதவீத பிரதிநிதித்துவத்தைப் பெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 'சண்டே லீடர்' ஊடகவியலாளரை பின் தொடர்ந்தவர் கைது

(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகையின் ஊடகவியலாளர் பெட்ரிகா ஜோன்ஸ் பயணித்த காரை பின் தொடர்ந்து சென்றதாக கூறப்படும் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஊடகவியலாளர் பெட்ரிகா ஜோன்ஸ் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்தார்.

மிரிஹான நடுகாரவத்த பகுதியில் தாம் காரை செலுத்திக் கொண்டிருக்கும் போது சந்தேகநபர் மோட்டார் சைக்கிளில் தம்மைப் பின்தொடர்ந்ததாக ஊடகவியலாளர் பெட்ரிகா ஜோன்ஸ் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் நேற்று முன்தினம் இரவு சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் மாதிவெல பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிய வந்துள்ளது.

# பணிநிலை வெற்றிடம்

**தினமுரசுப் பத்திரிகையில் பின்வரும் வேலைகளுக்கான பணிநிலை வெற்றிடம் உண்டு.**

01. அச்சு இயந்திரம் இயக்குபவர் (Sord, Kord)
    (பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்)
02. பக்க வடிவமைப்பாளர்
03. கணினித் தட்டச்சாளர் (தமிழ்)

மேற்படி பணிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 10.02.2012 இற்கு முன்னதாக சுய விபரக்கோவையை, ஆளணி முகாமையாளர், தினமுரசு, 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என் னும் முகவரிக்கு அல்லது thinamurasu@live.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

# முஸ்லிம் கட்சிகளுக்கு இடையில் இணக்கப்பாடு அவசியமாகும்



(கொழும்பு)

முஸ்லிம் கட்சிகளுக்கு இடையில் பொதுவான இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்பட வேண்டும். அரசாங்கத்திடம் முஸ்லிம் மக்களின் கோரிக்கைகளை முன்வைக்க முஸ்லிம் கட்சிகளுக்கு இடையில் ஒற்றுமை நிலைநாட்டப்பட வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின்பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் அங்கம் வகித்த போதிலும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும், அதுவே எமது நிலைப்பாடு. முஸ்லிம் கட்சிகள் பொதுவான இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வது மிகவும் அவசியமானது.

இதன் ஓர் கட்டமாக ஜனநாயக தேசிய முன்னணியுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் கட்சிகளுக்கு இடையில் பொதுவான இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் கூடுதல் நன்மைகளை அடைய முடியும்.

கூட்டாக இணைந்து செயற்படுவது குறித்து ஏனையகட்சிகள் இதுவரையில் எந்தவிதமான பதிலையும் அளிக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஜனவரி 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.